1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS, JAFFNA.
Telephone: No. 100.

# சத்தியவேதபாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆடி மாதம் 15-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 27-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

இடையிடையே சோழகக்காற்று மும்முரமாகஎழுந்து புசல்போலவீசுவதும், பின்னர்ஓய்ந்து இளைப்பாறுவதுமாய் இருக்கின்றது. மப்புமந்தாரம் காணப்படினும் மழையில்லை. உரமாக வீசுங்காற்று ஓர்வித குளிரோடுவீசுவதால் ஊரிலே தடிமன், காய்ச்சல், இருமல் தலைகாட்டிக்கொண்டிருக்கின்றன.

### ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி

ஊர்காவற்றுறையிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரி தீவுபற்றிலுள்ள மக்களுக்கெல்லாம் மிகமுக்கியமானது. அதனால்இது சகலவிதமான சிகிச்சைவசதிகளும் பெறக்கூடியவகையிலே திருத்தியமைக்கப்பட விருக்கிறது. அதாவது மூன்றுலட்சம்ரூபா செலவில் இதனைத் திருத்தியமைக்கத் தாம் நடவடிக்கை எடுப்பதாகச் சமீபத்திலே இதைப் பார்வையிட்டுச்சென்ற சுகாதாரமந்திரியார் தெரிவித்துப்போயிருக்கின்றார்.

### யாழ்ப்பாணத் தேர்தல்மனு

யாழ்ப்பாணத்தேர்தல் ஆட்சேபமனு விசாரணை கடைசியாகச் சென்றவியாழக்கிழமை முடிவடையலாயிற்று. அதனைவிசாரணைசெய்தநீதியாசர் சங். வீரசூரியஅவர்கள் தீர்ப்புச்சொல்வதைப் பின்போட்டிருக்கின்றார். இந்தத்தேர்தல்மனுவிசாரணை சென்றவருடம் ஐப்பசிமாதம் 15-ந் திகதி ஆரம்பமாயிற்று. எல்லாமாக 128 தினங்களாக விசாரணைநடைபெற்றிருக்கிறது. சென்ற பாராளுமன்றத் தேர்தலின்போது யாழ்ப்பாணநகர்த்தொகுதிப் பிரதிநிதியாகத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்கள் தெரிவுசெய்யப்பெற்றார். அவர் தெரிவுசெய்யப்பெற்றதை ஆட்சேபித்துத் திரு. எஸ். வி. குணசிங்கம், திரு. சி. ஜே. சின்னப்பா என்பவர்கள் இந்த மனுவைச் சமர்ப்பித்திருந்தார்கள்.

### பண்ணைக் கடற்பாதை

பண்ணைக் கடற்பாதையின் நடுவிலுள்ள கடல்இடைவெளியை முற்றாக நிரவுமிடத்து, கடற்தொழிலாளருக்குப் பெரியகஷ்டம் ஏற்படும். அதாவது மீன்பிடிபடகுகள், வள்ளங்களின் போக்குவரத்து நின்றுவிடும். அத்துடன் யாழ்ப்பாணத் துறைமுகத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கும், மற்றுந் தீவுகளுக்கும் போக்குவரத்து நடத்திவருகின்ற மச்சுவாய்கள், தோணிகளின் பிரயாணமும் நின்றுவிடும். அதனால் பண்ணைக் கடற்பாதையிலுள்ள கடல்இடைவெளியை நிரப்புவதற்குப் பதிலாக அதற்குமேலாகத் தொங்குபாலம்ஒன்றை அல்லது ஓர்படகுப் பாலத்தை அமைக்கும் படியாகப் போக்குவரத்து-பகிரங்கவேலை மந்திரியாரைக் கேட்டுக்கொள்ளும்பிரேரணை ஒன்று யாழ்ப்பாண நகரசபையின் மாதாந்தகூட்டத்தில் திரு. பி. எம். ஜோண்அவர்களால் எடுத்தாளப்பட்டு அரங்கேறியிருக்கிறது.

### வர்த்தக – கடற்தொழில் மந்திரியார்

வர்த்தக – கடற்தொழில் மந்திரியாராய் இருந்துவந்த திரு. ஆர். ஜி. சேனநாயகஅவர்கள் சென்றசனிக்கிழமை தமதுஇராசிநாமாவைப் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்களிடம் சமர்ப்பிக்கலாயினர். சிலமுக்கியமான கருமங்களில்ஏற்பட்ட கடுமையான கருத்துவேற்றுமையே இவர் அவ்வாறுசெய்யக் காரணமாகும். மந்திரிபதவியை இராசிநாமாச்செய்யவேண்டாமென்று அவரைப்பிரதமர் எவ்வளவோ வருந்திக்கேட்டும், பிறரும்எவ்வளவோ சொல்லிப்பார்த்தும், "என் மனதை மாற்றமுடியாது; நான்விலகுகிறேன்" என்று அழுத்தமாகச் சொல்லி விலகிவிட்டார்.

### புதிய மந்திரியார்

வர்த்தக – கடற்தொழில் மந்திரியாராக இருந்துவந்த திரு. ஆர். ஜி. சேனநாயகஅவர்கள் தமதுபதவியை இராசிநாமாச் செய்தமையாலே அவரிடமாகப் புதியமந்திரியாராய்த் திரு. ஷேர்லி கொறியாஅவர்கள் நியமனஞ் செய்யப்பெற்று அன்றுஉருமத்தின் போது இராணிமாளிகைசென்று விசுவாசப்பிரமாணஞ்செய்து மந்திரிபதவியை ஏற்றுக்கொண்டார். இவர் பாராளுமன்றத்திலே சலாபநகர்ப் பிரதிநிதியாவர். அப்போது இலங்கைத் தேசியகாங்கிரஸின் பிரஸ்தாபம்பெற்ற தலைவரும், இலங்கைஅரசியற்திருத்த இயக்கத்தின் பெருந்தலைவர்களில் ஒருவருமாக விளங்கியிருந்த திரு. சி. ஈ. கொறியாஅவர்களின் புதல்வர். 48 வயதுடையவர். வர்த்தக – கடற்தொழில் மந்திரியாரின் பாராளுமன்ற காரியதரிசியாக இதுவரை கடமையாற்றிவந்தவர். இப்பதவிக்கு வந்தது முதல் இவர் கடற்தொழில்விருத்தி பற்றி மிகுந்தகரிசனை எடுத்துவந்து இலங்கையிலுள்ள கடற்தொழில் நிலையங்களில் ஏறக்குறையஎல்லாவற்றையுமே பார்வையிட்டிருக்கின்றார். இவர் சுருட்டுப்புகைப்பதில்லை.

### தீவிர றெயில்வேப் பிரயாணம்

கொழும்புக்கும் – யாழ்ப்பாணத்துக்கும், கொழும்புக்கும் – கண்டிக்கும், கொழும்புக்கும் – மாத்தறைக்குமிடையில் தீவிரப்பிரயாண 'எக்ஸ்பிறெஸ்' றெயின்வண்டிப் பிரயாணசேவைகள் இம்மாதமுடிவிற்குள் பரிசோதனை நிமித்தமாக ஆரம்பிக்கப்பட விருக்கின்றன. தினமும் போகவும்வரவுமாக இரு 'எக்ஸ்பிறெஸ்' றெயின் வண்டிகள் இம்மூன்றுபகுதிகளிலும் ஓடவிடப்படும். கொழும்பு—காங்கேசன்துறை 'எக்ஸ்பிறெஸ்' றெயின் வண்டி தினமும் மாலை 9-15 மணிக்குக் கோட்டைஸ்ரேஷனிலிருந்து புறப்பட்டு மறுநாட்காலை 7-20மணிக்குக் காங்கேசன்துறை வந்துசேரும். அதாவது தற்போதையநேரத்திலும் 1 மணி 40 நிமிஷம் குறையும். காங்கேசன்துறை—கொழும்பு 'எக்ஸ்பிறெஸ்' றெயின்வண்டி தினமும் மாலை 8-20 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு மறுநாட்காலை 6-50 மணிக்குக் கோட்டைஸ்ரேஷன் போய்ச்சேரும். இது பொல்காவலை, அநுராதபுரத்திலும் யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள எல்லாஸ்ரேஷன்களிலும் தங்கிச்செல்லும்.

### சாங்கோபாங்க சுவாமிகள் தினம்

வடமராட்சிக் கத்தோலிக்கஆசிரியர்கள் 18-7-54 ஞாயிற்றுக்கிழமை வதிரி, திருஇருதய கல்லூரிமண்டபத்திலே வண. பி. ஈ. அல்பிறெட், எம். ஏ. சுவாமியவர்கள் தலைமையில்கூடி, ஆசா. சாங்கோபாங்க சுவாமிகளின் நினைவுதினத்தைக் கொண்டாடிச் சுவாமிகளின் படத்திறப்புவிழாவை நடத்துவதெனத் தீர்மானித்திருக்கின்றனர். விழாவிற்கலந்துகொள்ளும்படி அன்பர்கள்அனைவரும் வேண்டப்படுகின்றார்கள்.

### புதியஅதிகாருக்கு வரவேற்பு

மானிப்பாய்க் கோவிற்பற்றுச் சனசமூகநிலையமும், அப்பகுதியிலுள்ள மற்றும்ஸ்தாபனங்களுஞ்சேர்ந்து புதிய அதிகார் ஏ. செல்லமுத்து அவர்களுக்குச்சென்றவெள்ளிக்கிழமை ஓர்ஆடம்பரமான வரவேற்பு அளிக்கலாயின. அதிகார் செல்லமுத்து அவர்களும், அரசவாசல்முதலியார் சி. தியாகராஜா அவர்களும் அதிகாரின் இல்லத்திலிருந்து வாத்தியவரிசையுடனும், கோலாட்டத்துடனும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்துக்குப் பெரிய ஊர்வலமாக அழைத்துக்கொண்டு போகப்பெற்றனர். பின்னர் நிகழ்ந்த வரவேற்புவிழாவிற்கு அரசவாசல் முதலியார் தியாகராஜா தலைமைவகித்துப் பேசியபோது: மகிமைப்பட்டங்கள் அருளப்படுவது, அவற்றைப்பெறுவாரைச் சந்தோஷப்படுத்தவும், திருப்திப்படுத்தவுமல்ல, ஆனால், அவர்களின் நல்லமாதிரிகையை மற்றவர்களும் பின்பற்றுமாறு உற்சாகமூட்டவும், ஊக்கமளிப்பதற்குமேயெனக் கூறிநின்றார். அத்தருணம் அதிகாருக்கு அழகியவாவேற்புப்பத்திரங்கள் படித்துக்கொடுக்கப்பட்டன.

### பன்னிரு ஐக்கிய பண்டகசாலைகள்

வலிகாமம்கிழக்குப்பிரிவிலே பன்னிரண்டுபண்டகசாலைகள் — அதாவது சங்கக்கடைகள் திறமையாகத் தொண்டாற்றாதபடியால் விரைவிலே அவைகள் மூடப்படவேண்டுமென்று சமீபத்தில் உத்தரவாயிற்று. ஆயினும்அவைகள் தொடர்ந்து நிலைபெற்றிருக்க வேண்டுமெனவிரும்பினால் அவைகள்சிலகாலத்துள் ஆதாயங்காட்டவேண்டுமென்று கட்டளையிடப்பட்டுள்ளன. அதனால் இப்பண்டகசாலைகள் தற்போது முன்னிலுங்கூடிய கவனத்துடன் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் அமைப்பிலும், நிர்வாகமுறைகளிலும் திருத்தஞ்செய்யக் காரியக் கம்மிற்றிகள் முயற்சியெடுத்து வருகின்றன. ஆனால், கடந்தஆண்டுகளிலே இவைகள் அடைந்த பணநஷ்டங்களைச் சமாளிப்பது பெரியவல்லையாகுமாம். இம்மாத இறுதிக்குமுன் குறிப்பிடத்தக்கதிருத்தம் காணப்படாதுவிட்டால் மூடிவிடவேண்டுமென்று உணவு-கமத்தொழிற் பகுதி இலங்கையிலுள்ள சுமார் 2,000 ஐக்கியபண்டகசாலைகளுக்கு அறிவித்திருக்கிறது. தற்போதுள்ள 3,500 சங்கக்கடைகளையும்ஆராய்ந்துதிருப்தியற்றவைகளை நீக்கிவிடும்படி உணவு-கமத்தொழில்மந்திரியார் 22 உதவிக்கம்மிஷனர்களைக் கேட்டிருக்கின்றார்.

### புகையிலைக்கைத்தொழில் கம்மிஷன்

புகையிலைக்கைத்தொழில் சம்பந்தமாக விசாரணைசெய்து அறிக்கைசமர்ப்பிக்கும் கம்மிஷனைக் கவர்னர்-ஜெனறல் நியமித்திருக்கின்றார். திரு. ஏ. டபிள்யு. நடராசாஅவர்கள்தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக்கம்மிஷனின் மற்றிருஅங்கத்தவரும் திரு. ஏ. பி. அற்றிக்கலே, திரு. ரி. சி. இராசரத்தினம் என்பவர்களே. இலங்கையில் சுருட்டு, சிகறெற்முதலிய புகையிலைக்கைத்தொழில்களின் தற்போதைய நிலைமையை ஆராய்ந்து அவற்றை விருத்திசெய்வதற்கான வழிவகைகளைச் சிபாரிசுசெய்வதே இந்தக்கம்மிஷனின் நோக்கமாகும்.

### நகர்வாசிகளின் வரவேற்பு

சென்னைச்சர்வகலாசாலையின் உபவேந்தரான சேர். ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் எம். டி., எவ். ஆர். சி. எஸ்., எவ். ஆர். சி. ஏ. ஜி., டி. சி. எல்., டி. எல். ரிரி அவர்கள்நாளை 16-ந் திகதிவெள்ளிக்கிழமை சென்னையிலிருந்துயாழ்ப்பாணம் வரவிருக்கிறார். அவரைக்கௌரவிக்குமாறு யாழ்ப்பாண நகரசபைமேயரும், அங்கத்தவர்களும் யாழ்ப்பாண நகரமண்டபத்திலே நாளைபிற்பகல் 5மணிமுதல் நகர்வாசிகள்போல் அவருக்கு ஓர்பொதுவரவேற்பும், அதனைத்தொடர்ந்து ஓர் தோட்டோபசாரணையம் நடத்தமுன்வந்து பிரபலஸ்தர்கள்பலருக்கும் அழைப்புப்பத்திரம் விடுத்திருக்கின்றார்கள்.

### காரியதரிசியின் இராசிநாமா

சென்றசனிக்கிழமை திரு. ஷேர்லி கொறியாஅவர்கள் வர்த்தக-கடற்தொழில் மந்திரியாராக நியமனஞ்செய்யப்பட்டதும் தொழில் – சமூகசேவாமந்திரியாரின் பாராளுமன்ற காரியதரிசியாய் இருந்துவந்த திரு. ரி. எவ். ஜயவர்த்தனஅவர்கள் தமதுபதவியையும் இராசிநாமாச் செய்துவிடலாயினர். அதற்குக்காரணம், வர்த்தக-கடற்தொழில் மந்திரிபதவிக்கு ஆளைத்தெரிவு செய்தபோது பாராளுமன்ற காரியதரிசிகளுள் யார்நீண்டகாலம் சேவை செய்திருக்கிறார்கள் என்பதைப் பிரதமர் கவனிக்கவில்லை என்பதேயாகும். ஆயினும் பிந்தப் பிரதமாது நன்மதியைக்கேட்டு, இவர் தமது இராசிநாமாவைச் சென்றதிங்கட்கிழமை நிறுத்திக்கொண்டார்.

### இந்திய பருப்புவகைகள்

இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பருப்பும், மற்றும் தானியவகைகளும் மீண்டும் ஏற்றுமதிசெய்வதற்கு அனுமதிக்க இந்தியஅரசாங்கம் தற்போது தீர்மானித்திருக்கிறது. அதனால் அங்கிருந்து இங்கே இறக்குமதிசெய்யப்படும் பருப்பு, பாசிப்பயறு போன்ற பொருட்களின்விலை இற்றைக்குப் பதினைந்துவருடங்களுக்குமுன்போல மலிவானவிலைக்கு இறங்கிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைக்குத் தேவையான பருப்புவகைகளில் பெரும்பகுதியை அப்போது இந்தியாவே அனுப்பிவந்தது. ஆனால், இரண்டாவது உலகயுத்தகாலத்திலும், அதற்குப்பின் இந்நாள்வரையிலும் இலங்கைக்குப் பருப்புவகைகள் ஏற்றுமதி பண்ணுவது அங்கே தடைசெய்யப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினைந்துவயதில் பக்தனான பள்ளிச் சிறுவன்

(எஸ். யேசுதாஸ்)

இத்தாலிய சிறுவன் அவன். ரீவா என்ற சிறுகிராமத்தில் பிறந்தவன். தொமினிக் சவியோஎன்பது அவன் பெயர். விளையும்பயிரை முளையில் தெரியுமல்லவா? வயது ஐந்துகூட முடியவில்லை. தினமும் திவ்வியபூசைக்குப்போகத் தவறமாட்டான். மழையிலும், பனியிலும் முதன்முதல் பூசைக்குப்போகிறவன் அவன்தான். சிலநாட்களில் அவன்போகும்போது கோவில் கதவுமுதலாய்த் திறந்திருக்க மாட்டாது. அப்படியே கோவில்வாசற்படியில் உட்கார்ந்து செபித்துக்கொண்டு காத்துநிற்பான். பூசைப்புத்தகம் தூக்கிவைக்கப் பீடங்கூட எட்டாது. ஆனாலும், அடிக்கடி அவன்தான் பூசைக்கு உதவிசெய்வான்.

ஒருநாள் அவர்கள்வீட்டுக்கு ஓர் விருந்தாடி வந்திருந்தார். மதியானம் அவர்சாப்பிட உட்காருமுன் செபஞ்சொல்லவில்லை. மறுநேரம் தொமினிக் அவருடன் உட்கார்ந்து சாப்பிட மறுத்துவிட்டான். அவன் தாய் பிறகுஓர்சமயம், "ஏன்அப்படிச் செய்தாய்?" என்று கேட்டாள். "அம்மா! செபம்சொல்லிவிட்டுச் சாப்பிடவேண்டும்என்று உணராதமிருகங்களோடு எப்படி ஒன்றாகஇருந்து நாம் சாப்பிடுவது?" என்று பதில்சொன்னான் சவியோ.

வயது ஏழுஆனது. புதுநன்மை வாங்கும் நாள்வந்தது. அவனதுசீவியத்திலே மிகமிகச்சந்தோஷமான நாள் அதுதான். புதுநன்மை வாங்கிய அன்று தன்பங்குக்குருவானவரைப் பார்க்கப்போனான். அன்று அவன் சொன்னவார்த்தையைக் கேளுங்கள்: "சுவாமி! நான்இன்றைக்கு என்இருதயத்தில் எழுந்துவந்த யேசுவுக்கு என்னவாக்குக் கொடுத்தேன் தெரியுமா? முதன்முதலாக நான்அடிக்கடி பாவசங்கீர்த்தனம்செய்து திவ்விய நன்மை வாங்குவேன் என்று உறுதி சொன்னேன். இனி யேசுவும், அவரதுஅம்மா கன்னிமரியாயுந்தான் எனக்கு மிகமிகப்பிரிய சிநேகிதர்கள்" என்றான். உடனே சுவாமியார்சொல்வார்: "மெத்தச்சந்தோஷம், சவியோ! நன்மை வாங்கியபின் உன்சிநேகிதருடன் அல்லது உன்அப்பா அம்மாவோடு அன்பாய்ப் பேசுவதுபோலத் தான் யேசுவோடு பேசவேண்டும்."

"இன்னும் ஓர்முக்கியமான காரியம் சுவாமி! என்மனக்கண்முன் எப்போதும் நிறுத்திவைக்க ஓர் நீதிவாக்கியம் தயாரித்து, அதையும் யேசுவிடம் சொல்லிவிட்டேன்."

"அதுஎன்ன?"என்றார் சுவாமியார்.

"பாவத்தைவிடச் சாவதேநல்லது என்பதுதான்சுவாமி."

சுவாமியார் அப்படியே மலைத்துப் போய்விட்டார். ஏழுவயதுச்சிறுவன் இவ்விதம்யேசுவை மனம் வருந்தச் செய்யும் பாவம்செய்வதைவிட உயிரை விடுவதுமேல் என்று உணர்ந்திருக்கிறானே என்றுதான் அவர் ஆச்சரியப்பட்டார். "சவியோ! உனது குறிக்கோள்வாக்கியம் அருமையானதுதான்; ஆனால், கடைசிமட்டும் இதைக்கைக்கொண்டு காப்பாற்றுவாயா? அவ்வளவு எளிதல்லவே தம்பி."

"எளிதில்லைத்தான்சுவாமி; ஆனால், நான் காப்பாற்றவேண்டும்; காப்பாற்றுவேன்"என்று பதில்அளித்தான்.

தொமினிக் படித்துவந்த பாடசாலை அவன்வீட்டிலிருந்து சுமார் இரண்டு மைல்தூரம் இருக்கும். தினம் தன்னந்தனியே நடந்துசெல்வான். ஓர் நாள் ஓர்பெரியவர் அவனிடம்: "தம்பி! இவ்விதம் தனியே நீ போவதற்கு உனக்குப் பயமில்லையா?" என்று கேட்டார்.

"எதற்குப்பயப்பட? நான்தனியே போகிறதில்லையே; எனது காவல்சம்மனசு என்னுடனேயேவருகிறாரே."

சவியோவுக்கு வயதுபத்து பூர்த்தியானது. பாவத்தைவிடச் சாவதே நன்றுஎன்னும் குறிக்கோளைச் செயலில்காட்டவேண்டிய சந்தர்ப்பம்ஒன்று வந்துவிட்டது. சவியோ தனது பள்ளித்தோழர்களுடன் பக்கத்திலிருந்த குளத்திற்கு நீந்தும்படிசென்றிருந்தான். அந்தக்கூட்டத்திலே ஒருவன் ஓர்பெரிய பொல்லாதவார்த்தையைத் திடீரென்று சொன்னான். சவியோவின்முகம் சிவந்தது. அதைஅவன் விரும்பவில்லையென்றும், முற்றிலும் வெறுப்பதாகவும் தன் முகச்சுளிப்பினால் காட்டினான். அப்போது அந்தத் துஷ்டன்சொல்வான்: "சவியோ! இன்னும் நாம் பச்சைக்குழந்தைகள் அல்ல; இந்தவயதில் இப்படியெல்லாம் பேசலாம்."

அதற்குச் சவியோ வெகுஆத்திரத்துடன்: "ஆம், ஆம், நான் பச்சைக் குழந்தை இல்லைத்தான்; ஆனால், இவ்வித பேச்சைக்கேட்டுரசிக்கும் ஓர் பன்றியுமல்ல" என்று சொல்லிவிட்டு வேகமாய் வீடுபோய்ச்சேர்ந்தான். அவன்தாயும் நடந்ததைக் கேட்டுச் சவியோசெய்ததை மெச்சினாள். பாவத்தைத்தவிர்க்கப் பாவச்சந்தர்ப்பத்தைவிட்டுப் பறக்கவேண்டும் என்பதை இன்னும்நன்றாக அவன் மனதில் அவள் பதியவைத்தாள்.

ஓர் நாள் பள்ளியிலே இன்னொரு பையன்செய்த ஓர்பெருங்குற்றத்தைச் சவியோமேல் சுமத்திப்போட்டார்கள். அக்குற்றம் யார் செய்ததென்று சவியோவுக்குத் தெரியும். ஆனால், அவன் அதைச்சொல்லாது அந்தப்பழியைத் தன்மேல் ஏற்றுக்கொண்டான். பிறது ஒருநாள் உண்மைதெரிந்தபின்: "ஏன் அவ்விதம்செய்தாய்? உள்ளதைச் சொல்லிவிட்டு நீ தப்பித்திருக்கலாமே!" என்று கேட்டதற்கு அவன் சொல்வான்: "அந்தப்பையனை நான் அப்போது காட்டிக்கொடுத்திருந்தால் உடனே அவனைப் பள்ளியினின்று வெளியேற்றியிருப்பார்கள்; இவ்வித குற்றம் இதுதான் எனக்கு முதல் தடவை; ஆகையால், என்னை அவ்விதம் வெளியேற்ற மாட்டார்கள்என்று எனக்குத்தெரியும்; மேலும் யேசு தாம் செய்யாத பிறர் குற்றங்களுக்காகப் பாடுகள் அநுபவிக்கவில்லையா?"

சிறுவர்களைப் பயிற்றுவதில் சிறப்புப் பெயர்பெற்ற அர்ச். தொன்பொஸ்கோவின்கையிலே போய்ச்சேரும்பாக்கியம் பெற்றான் நம்சிறுவன். தூரின்நகரில் அர்ச். தொன்பொஸ்கோவே நடத்திவந்தமடத்தில் சவியோவுக்கு இடம் கிடைத்தது. இளமையிலே அவ்வித அர்ச்சியசிஷ்டதனத்தில் வளர்ந்த சவியோ அர்ச். தொன்பொஸ்கோவின் கையில்வளர்ந்தால் எவ்விதமிருந்திருப்பான்? வெகுசீக்கிரத்தில் உத்தமதனத்தின் உச்சியை அடைந்தான்.

அந்தமடத்தில்நடந்த ஓர் சம்பவம். இரு வாலிபர் வெகுமூர்க்கமாகச் சண்டைபோட்டுக் கொள்ளுகிறார்கள். சவியோ இடையிற்போய் விழுகிறான். விலகிப்போகும்படி இருவரும் கத்துகிறார்கள். ஆனால், சவியோ நகரவில்லை. இருவரும் என்னசெய்வதென்று தெரியாமல் திகைத்துச் சவியோவுக்காகச் [illegible] சவியோ தன்[illegible]

# தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

## களிகூர்ந்தகாரணிக்கம்

### 5-ம் காரணிக்கம்—7-ம் பிரியதத்தம்

### 47. நகரத்திலே தேடிஅலைதல்

சூசைமாதவனும், தேவதாயும் ஜெருசலேம்நகரைக் கிட்டிச்சேருகிறார்கள். தேவகுமாரன் இறக்கவில்லையென்று வானவர்கள்உரைத்த வாசகத்தால் சிறிதுகவலை நீங்கப்பெற்றவராய், விடிந்தவுடன் அந்நகரமெங்கும் சுற்றிஅலைந்து தேடுகிறார்கள். எங்கும்காணவில்லை. அதனால் காலத்தை வீணாக்காது இருவரும் தனித்தனியாகத் தேடத்தொடங்குகின்றனர்.

தேவதாய் பட்டணத்தையடுத்த பகுதியெங்கும் தேடுகின்றாள். சூசையப்பரோ பட்டணத்திற்கு வெளியேயுள்ள சோலைகள்தோறும் தேடித் தேடிஅலைகின்றார்.

"செம்மா மணியிற் செல்வனைத்தாய்
தேடியகல்
அம்மா நகர்க்கண் அழுதன்றே
அலையுங்கால்
பைம்மா மலர்பெய் காவழியிற்
பரிவோங்கத்
தம்மா மகனைத் தருவுகின்றான்
தவவல்லோன்"

சூசைமாதவனின் பெருகியதுயரைக் கண்டு தாமும் புலம்புவதுபோலச் சோலைகளிலுள்ள பறவைகளும், வண்டுகளும் புலம்பாநிற்கின்றன. மலர்ந்த பூக்களும் நொந்து வாடாநிற்கின்றன. அவரும் அவற்றைப்பார்த்து: "எம் திருக்குமாரன் சென்றவழி காட்டுவிரோ" எனப் புலம்பியபடியே செல்கின்றார். அங்ஙனம் செல்லாநின்ற மாதவனுக்குக்குறுக்காக ஓடிக்கொண்டிருந்த ஓர்ஆறு தென்படுகிறது. அவரும் அந்தஆற்றைப் பார்த்துப் புலம்புவாராய் .........

"என்தன் சிந்தை போல்நிலையா
திரிசிந்தே
நின்தன் சிந்தை போல்கடல்நான்
நேடிஅலைந்(து)
இன்றென் சிந்தை எஞ்சஇவண்
அருட்கடலோன்
உன்றன் சிந்தை எழவுற்று
ளேனென்றான்"

என்மனம் அலைவதுபோல நிலையில்லாது அலைந்துதிரிகின்ற ஆறே (சிந்து) நீ கருங்கடலைநோக்கிப் போவதுபோல நானும் ஒருமாகடலைத் தேடி அலைகின்றேன். நான் மனம்வருந்தி மெலியவும், நீ மனம்மகிழ்ந்து உவப்பவும் அவ்வருட்கடலோன் இங்கு வந்தனனோ? என்று துன்பமேலீட்டால் புலம்புகின்றார்.

அவ்வாறாகப் பூங்காவனத்தைக் கண்டும், நிழற்சோலையைக் கண்டும், பூந்தடாகத்தைக் கண்டும், புள்ளினத்தைக் கண்டும் தேவகுமாரன் சென்றவழி காட்டீரோஎன மனம்நைந்து வினவிநிற்கின்றார். மீளவும் சிலபறவைகளைத் தன்பிரிய குமாரனிடத்துத் தூதனுப்ப எண்ணியவராய் .........

"குயிலே கிளியே வெண்குருகே
கோவனமே
மயிலே இனைந்தென் மனங்குளிர்ப்ப
அன்னான்கொள்
எயிலே வனமே இயம்பீரேற்
போயவற்கே
தயிலே இலநான் திஞ்சுவன்என்
பீரென்றான்"

குயிலே! கிளியே! வெண்ணாரய்! அரசஅன்னமே! மயிலே! என்மீதிரங்கி என்மனம்குளிரும்படி தேவகுமாரன் சென்றடைந்த ஊராகிலும் (எயில்), காடாகிலும் சொல்லமாட்டீராகில் ஒருதூதாவதுசென்று வரமாட்டீரோ? நீங்கள் அத்திருக்குமாரனை அணுகி, என்துயர்கூறி வருவீரா? செல்வமகனைக் காணாதுவிட்டால் உயிரிழப்பேன்என்றதை அவற்குச் சொல்லக்கடவீர்" என்கிறார்.

தேவதாய் அகநகரெங்கும்தேடியும் திருக்குமாரனைக் காணாதவராய், ஈற்றில ஒருதடாகக்கரையில் வந்துநின்று சோகித்துப் புலம்புகின்றாள்.

பூத்தமதுமலரால் அழகுபெற்றுக் கமழும் தடாகமே! உனைப்போல நானும்களிகூர்ந்து உவந்தேனே. மதுமாறாத் தேவமலர் என்நெஞ்சிற் பூத்ததால், என்உளமும் ஒருபூந்தடாகமாக ஓங்கிவாழ்ந்திருந்தது. இன்று அம்மலரில்லாமல் என்உள்ளம் வெம்பிக் காய்கிறதே. திருமகனே! மழைத்துளியின்றிக் காய்ந்தகுளம்போலும், வாசனையின்றி வாடிய மலர்போலும் நான் வருந்தாநிற்க என்னைப்பிரிந்து எங்குசென்றனையோ? நீ ஓர்அன்னமும், நான் ஒருதாமரையுமாக மிக்க இன்பத்தோடு பிரியாதிருந்தோம்அல்லவா? இன்று நீ பிரியக் காரணம் யாதோ? என்னிடத்திலுள்ள அன்பின்குறைவைக் கண்டாயோ?

"வெண்ணெய்க்கிரி வெந்தன போலழு
தென்
கண்ணைக் கிழிநீர் கடிதோ டநெடும்
புண்ணைக்கிழி தீயையுள் ஊற்றியபின்
விண்ணைக் கிழிமின் னெனவே
கினையோ"

"வெண்ணெயாற் செய்தமலை வெந்துருகினாற்போல, நானும் உருகிஅழுது இருகணணைப்பிளந்து திரளாக நீர் விழுந்து ஓடும்படிக்கு, என்நெஞ்சிற் செய்த புண்ணைக்கிழித்து உள்ளே கொடுஞ்செந்தீயைப் புகுத்தினபின்பு மேகத்தைக்கிழித்துத் தோன்றிமறையும் மின்னலைப்போல, நீயும்மறைந்து போனாயோ? என்கண்மணியே! என் செல்வமே! ஆருயிரே! என்கண்முன் தோன்றாயோ? என்கண்களே! நான் உயிர்பிழைத்திருக்கும்படி சீக்கரத்தில் அவரைக்காட்டுங்கள்" என்று பிரலாபிக்கின்றாள்.

அங்ஙனமாகத் தேவதாய் புலம்பி அழுவதைக்கண்ட ஒருபெண், "தாயே! நீர்அழுவதன் காரணம் என்ன?" என்றுவினவ, தேவதாயும் தன்கவலையைத் தெரிவிக்கின்றாள்.

அப்பொழுது அந்தப்பெண் காணாமற்போனகுமாரனின் அங்கஅடையாளங்களை விசாரிக்கின்றாள்.

தேவதாயும் தனது திவ்வியகுமாரனின் மாட்சிமைகளை எடுத்துரைக்கின்றாள்.

அதற்கு அப்பெண் கூறுவாள்: "அன்னையே! நேற்று ஒருசிறுவன் என்வீட்டுக்குவந்து பிச்சைகேட்டான். அவனிடத்திலே நீர்சொல்லும் அங்க அடையாளங்களெல்லாம் காணப்பட்டன. அவனே உமதுகுமாரனாயிருக்க வேண்டும். அவன் இவ்வூரிலேதான் இருப்பான். நீர் கவலைப்படவேண்டாம். விரைவிலே கண்டடைவீர்" என ஆறுதல்கூறிச் செல்கின்றாள்.

---

சுரூபத்தை எடுத்து அவர்களுக்குக் காண்பித்து: "என்மேல் அடிவிழுமென்று இவ்விதம்யோசித்து நிற்கிறீர்களே; ஆனால், சற்றுமுன் நமது பாடுபட்டயேசுவை அடிக்க நீங்கள் தயாராயிருந்தீர்களே; நாம்வீணில் சண்டையிட்டுக் காயப்படுத்திக் கொள்ளும் போது பாவம்செய்கிறோம்; பாவம் செய்யும் ஒவ்வொருமுறையும் நாம் [illegible] போலத் தானே" என்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதாவின் இராக்கினித்துவ திருநாள்

வருகிற கார்த்திகைமாதம் 1-ந் திகதியாகிய சகலஅர்ச்சிய சிஷ்டர்களின் திருநாளன்று — அதாவது தேவதாயாரின் மோட்சாரோபணம் விசுவாச சத்தியமாக நிர்ணயித்துப் பிரகடனஞ்செய்யப்பெற்ற நான்காவதுவருட நிறைவுதினமன்று ரோமாபுரியிலே மரியாயின் சர்வதேச மகாநாட்டின் முடிவில் (இந்தமகாநாடு வருகிற ஐப்பசி 24-ந்திகதிமுதல் கார்த்திகை 1-ந் திகதிவரையில் நடந்தேறும்.) பரிசுத்தபாப்பரசர் "தேவதாயாரின் இராக்கினித்துவ திருநா"ளைப் பிரசித்தஞ் செய்வாரென நம்பத்தக்கமுறையில் "ஒசேர்வாத்தோறே ரோமானோ" எனும் வத்திக்கான் பத்திரிகை கூறுகின்றது.

இந்த மகிமைவரிசையானது தேவதாயாருக்கு மனிதவர்க்கம் முழுவதாலுமே அருளப்படும் ஓர்நவமான பாராட்டுரையாய் இருப்பதுதவிர, அது திருச்சபையைஆதரித்துப் பாதுகாப்பதற்கும், சமாதானம்நிறைந்த நவமான ஞானவெற்றிகளுக்கு அதனை வழிநடத்துவதற்கும் தேவ அன்னைக்குள்ள அணைகடந்தவல்லபத்தை உறுதிப்படுத்துவதாகும்" என்றும் அப்பத்திரிகை மேலும்தெரிவிக்கின்றது. இப்புதிய திருநாளைக் கொண்டாடும்திகதிஎதுவென்று இன்னமும் குறிக்கப்படவில்லை.

மரியாயின் புனிதவருடத்திற்கெனப் பரிசுத்தபிதா இயற்றிய செபத்திலே "நீர் உற்பவித்த சணமுதற்கொண்டு மோட்சாரோபணமாகிப் பரலோக பூலோக இராக்கினியாகச் சருவேசுரன் உமக்கு முடிசூட்டிய நாள்வரை மற்றெல்லாச்சிருட்டிகளுக்கும் மேலாக அவர்உமக்கு அருளிய உந்நதகொடைகளின் ஒப்பற்றசம்பூரணத்தை வியந்து போற்றுகிறோம்" என வரைந்திருப்பது ஈண்டு கவனிக்கத்தக்கது.

### பாப்பரசரின் மகிமைவிருது

இந்தோசீனாவிலே வியெற்னமிய நிலஅளவைச்சேவையில் பௌத்தசமயத்தைச் சேர்ந்த ஓர்தலைவரும், அங்கு வறியவர்கள், நோயாளர்கள் பேரால் நடைபெற்றுவரும் தருமசேவைகளின் தலைவருமான நுகுயென்-டக்-ஓஅவர்களின் தருமகைங்கர்யங்களைப் பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் அவருக்குப் "பெனெமெறென்றி மெடல்" சன்மானித்திருக்கின்றார். இந்த மகிமைவிருதைப் பெற்றுள்ள இந்தப்பௌத்தபிரமுகர் தமது குடும்பத்தினர்முழுப்பேருடனும் கத்தோலிக்கராவதற்குத் தமக்குள்ளகருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

### கத்தோலிக்கரும் அகதிகளும்

ஐரோப்பாவிலே கஷ்டமுற்று வருந்துகின்ற 2,14,000 மக்களை அமெரிக்க ஐக்கியதேசத்தில் அனுமதிக்க ஜனாதிபதி ஐஸன்ஹூவர் அவர்கள் வகுத்துள்ள திட்டத்தின்கீழ் அதிகமாக ஜேர்மனி, ஆஸ்திரியா, இத்தாலிமுதலாம் நாடுகளிலிருந்தும், திறியெஸ்றிலிருந்தும் அத்தேசத்துக்குக் கொண்டுபோகப்பட விருக்கிறவர்களில் 2,000 பேருக்கு இல்லங்களும், பிழைப்புகளும் உதவுவதாக அமெரிக்ககத்தோலிக்கர் இதுவரை உறுதிவாக்களித்திருக்கின்றனர். இந்த 2,000 பேரிலும் அகதிகளும், ஐரோப்பியநாடுகளில் இடம்பெயர்க்கப் பட்டவர்களும் அடங்குவார்கள். அமெரிக்கத்தோலிக்கர் உதவும் இல்லங்களும், பிழைப்புகளும் தொடர்பாக வந்துகொண்டிருப்பதாலே 50,000 முதல் 75,000 கத்தோலிக்கர்வரையில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து அங்குபோய்க் குடியேறுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## சம்பேதுரு, பாவிலுதிருநாள்

இம்மாதம் 6-ந் திகதியாகிய சம்பேதுரு, பாவிலு அப்போஸ்தலர்கள் திருநாளன்று ரோமாபுரி சம்பேதுருவானவர் மகாலயத்திலே அவ்வாலய அத்தியட்சகரான கருதினால் ரெடெஸ்சினி ஆண்டவர் நிறைவேற்றிய திவ்வியபூசையைக்காண 30,000 மக்கள் சமூகமாயிருந்தார்கள். அங்கு பக்தர்கள் நெடுங்காலமாக முத்தமிட்டுவந்தமையாலே தனதுவலதுபாதம் தேய்ந்து ஒப்பமாகியிருக்கும் சம்பேதுருவானவரின் பாரியவெண்கலச் சுரூபமானது அன்று பாப்பானவருக்குரிய திருஅங்கிகள்தரிக்கப்பெற்றுச் சிரசிலே மும்மடிக் கிரீடத்துடனும், வலதுகரத்திலே மீன்பிடிகாரனின் கணையாழியுடனும் காட்சியளித்து நின்றது. பாப்பரசர் முதனாளிரவு பாரம்பரியமான வழமைப்பிரகாரம் அம்மகாலயஞ் சென்று சம்பேதுருவானவரின் கல்லறைமுன்பாகச் செபஞ்செய்து திரும்பினர்.

## வத்திக்கானும் எகிப்தும்

வத்திக்கானிடமாகத் தற்போது எகிப்தியஅரசாங்கத்தின் பிரதிநிதியாய் இருந்துவருகிறவர் ஜனாப் மாறெய் அலிபோஸி அவர்களே. வத்திக்கானிடமாகவுள்ள எகிப்திய பிரதிநிதித்துவம் ஸ்தானீகத்துவமாக உயர்த்தப்பட வேண்டுமென இவர்விரும்புகின்றார். ஆனால், மகமதியபிரஜைகளையே முக்கியமாகக்கொண்ட எகிப்தின் தீவிரவாதகுழுவினர் எகிப்திலே வத்திக்கான் ஸ்தானீகர்ஒருவரைக் கொண்டிருக்கச்செய்யும் எந்த விதமானமாற்றத்தையும் ஆட்சேபிக்கின்றனர். அவர்கள் இவ்விதம் ஆட்சேபிக்கக் காரணம், இந்தமாற்றமானது எகிப்தின் தலைப்பட்டணமாகிய கெய்றோநகரில் இருந்துவருகின்ற பிறநாடுகளின் ஸ்தானீகர்கள், பிரதிநிதிகளுக்கெல்லாம் வத்திக்கான்ஸ்தானீகர் தலைமைப்பதவி தாங்கக்கூடிய சாதகமானநிலைமை ஏற்படும் என்பதேயாகும்.

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

## கம்யூனிஸ்தரின் புதியதந்திரம்

சீனாவிலே ஷாங்காய்நகரிலுள்ள கத்தோலிக்கதலைவர்கள் இப்போது மற்றோர் புதிய ஆபத்தை எதிர்நோக்கியிருக்கின்றார்கள். அதாவது பிரசித்த வேதகலாபனையாலே திருச்சபையை அழிக்கத்தேடித் தோல்வியடைந்த கம்யூனிஸ்தர்கள் அவர்களை நரசோரமாகக் களவிலே தூக்கிச்செல்வதேயாகும். ஷாங்காய்நகரிலிருந்து ஆறுமைல்தூரத்திலே சோஸ் எனுமிடத்திலுள்ள மாதாவின் திருசேத்திரத்திற்கு யாத்திரைகளை ஒழுங்குபடுத்திய கத்தோலிக்கதலைவர்கள் இராக்காலத்திலே பலகாலும் காணமற்போகின்றார்கள். மறுபடிஅவர்கள் ஒருபோதுமே காணப்படவில்லை. ஒரேருசர்வகலாசாலை மாணவ தலைவர்களான ஐவரிலே மூவர் கம்யூனிஸ்தர்களாலே ஓர்நாள் தூக்கிச்செல்லப்பட்டு அன்றிரவே மறைந்துபோனார்கள்.

## வத்திக்கானுடன் இராசீயஉறவு

வத்திக்கானுக்கும், தொமினிக்கன்குடியரசு நாட்டிற்குமிடையே இராசீயஉறவை ஒழுங்குபடுத்தும் புதிய உடன்படிக்கை ஒன்றுக்குக் கையொப்பம் இடப்பட்டிருக்கிறது. கையொப்பம்இட்டவர்கள், வத்திக்கான்இராச்சிய காரியதரிசியான மொஞ்சிஞ்ஞோர் தார்டினிஆண்டவரும், தொமினிக்கன்குடியரசின் முன்னாள்ஜனாதிபதியான ஜெனறல் றாஜில்லோ அவர்களுமே. "இந்த உடன்படிக்கையானது உலகில்ஒழுங்குமுறையையும், கிறீஸ்துவநாகரீகத்தையும் பாதுகாப்பது என்றமட்டிலே கத்தோலிக்க திருச்சபைமட்டில் தனதுஅரசாங்கம் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையின் சின்னமாகும்" என்று ஜெனறல் றாஜில்லோ அவ்வேளை கூறலாயினர்.

## சிறியபுஷ்பத்தின் மகாலயம்

லிசியேபட்டினத்தில் நவமாகக் கட்டியெழுப்பப் பட்டுள்ள யேசுவின் சிறியபுஷ்பமாகிய அர்ச். தெரேசம்மாளின் பஸிலிக்காஎனப்படும் மகாலயம் சென்ற 11-ந் திகதி பெரிதும் ஆடம்பரவைபவங்களுடன் அபிஷேகஞ் செய்யப்படலாயிற்று. அர்ச். தெரேசம்மாளின் புகழ்ச்சிக்குச் சிலையிற் கீதம்போன்ற இம்மகாலயத்தைக் கட்டியெழுப்புவதற்கெனக் கடந்தமுப்பது ஆண்டுகளாகச் சகல கண்டங்களிலுமிருந்தேகத்தோலிக்கமக்கள் பணம் உபகரித்திருக்கிறார்கள். இதனைக் கட்டியெழுப்பும் வேலை 1928-ம்ஆண்டு கருதினால் சூகாஆண்டவரால் தொடக்கப்பட்டது. இரண்டாவது உலகயுத்தம் நடைபெற்றபோது இம்மகாலயத்தைச்சூழவர 300 யார் தூரத்துள் அறுபதுக்குமேற்பட்ட வெடிகுண்டுகள் விமானங்களிலிருந்து வீசப்பட்டும் இம்மகாலயம் அற்புதவிதமாகச் சொற்பசேதத்துடன் தப்பிக்கொண்டது. இது சுமார் 312அடி நீளமுள்ளது. மத்திய பகுதி 95 அடி அகலமுடையது. கப்பலாவின்உயரம் 300 அடி வரையிலாகும். முழுக்கட்டடமும் 130 தூண்களின்மேல் நிறுவிநிற்கின்றது. தற்போதையபாப்பரசர் ஓர்கருதினாலாக இருந்தபோது 1932-ம் ஆண்டு இதனைஆசீர்வதித்தார். 30 வருடங்களின்முன் 200 ஆசனங்களுடன்கூடிய கார்மேல்சிற்றாலயம் சகல யாத்திரிகர்களையும் அடக்கக்கூடியதாக இருந்தது. இன்றோ சிலகோடைகால ஞாயிறுவாரங்களில் 6,000 பேர் அமரக்கூடிய இந்தமகாலயம் யாத்திரிகர்களுக்குப் போதாதிருக்கின்றது. ஏனெனில், இன்று அர்ச். தெரேசம்மாள் உலகமுழுவதுமே அறியப்பட்டும், நேசிக்கப்பெற்றும் வருகின்றாள். வடதுருவ வட்டாரமுதல் தென்கடற்தீவுகள் வரையிலுள்ள 90 நாடுகளில் அவள்பேரால் 2,000 கோவில்களும், சிற்றாலயங்களும் இருந்துவருகின்றன.

## புத்தகுரு சன்மானித்த சுரூபம்

இற்றைக்கு ஆறு வருடங்களின்முன்னர் மவுண்ட்லவீனியாவிலுள்ள அர்ச். றீத்தம்மாளின் கோவிலுக்கு அழகாக நிர்மாணித்துச் செயயப்பெற்ற அர்ச். றீத்தம்மாள் சுரூபம் ஒன்று சன்மானிக்கப்படலாயிற்று. இந்தச்சன்மானத்தைச் செய்தசிற்பியார்? கனம். பெந்தார தம்மராமஎனும் புத்தகுருவே. தற்போது 58 வயதுடையவரான இந்தப்புத்தகுரு இன்று சிறந்த சைத்திரிகராகவும், உருவச்சிற்பியாகவும் விளங்குகின்றார். இதுவரை இவர் தமது சிற்ப, சித்திர வேலைப்பாடுகளைக் காட்சிகளில் வைத்துச் சிறந்த வெகுமதிகள் பெற்றிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

போதுக்கருத்து :— அந்நிய நாடுகளிற்போய்க் குடியேறச்செல்லுசிறவர்களின் ஆத்துமபராமரிப்புக்காக வேண்டிக்கொள்ளுவது.

மிஷன்கருத்து :— அங்கோலாவிலும், மொசம்பிக்கிலுமுள்ள திருச்சபைக்காக மன்ருடிக்கொள்ளுவது.



சபாத்துசிகாயவவேலதன்

1954-ம் ஆண்டு
ஆடி மாதம் 15-ந் திகதி

# இரட்சணியத்தின் கிரயம்

ஆனிமாதம் யேசுநாதசுவாமியின் திருஇருதயப் பக்திக்குக் குறிக்கப்பட்டிருப்பதுபோல இந்த ஆடிமாதம அவரது திருஇரத்தப் பக்திக்குக் குறிக்கப்பட்டிருக்கின்றது. தெய்வீகத்தோடு பிரியா ஐக்கியமுடைய மனுஷீகம்உள்ளவரும், மாமிசமாகிய வார்த்தையானவரும், அவதரித்த தேவகுமாரனுமாய் உள்ளவரது திருஉதிரம் தேவ உதிரம்! ஆராதனைக்குரிய உதிரம்! அர்ச். கத்தறீன்அம்மாள் சொல்வதுபோல, அது "திருச்சபையின் திவ்விய பொக்ஷம்." எங்கள் இரட்சணியத்தின் கிரயம். பரமண்டலத்தையும், பூமண்டலத்தையும் உறவுபடுத்திய சமாதானத்தின் முத்திரை. நரகத்தைப் பூட்டவும், பரகதியைத் திறக்கவுங்கூடிய திறவுகோல். பாவவிஷத்தைத்தீர்க்கும் பரமசஞ்சீவி. தேவவரப்பிரசாதம்தேங்கிவழியும்திவ்விய சுனை. தேவ கோபாக்கினியை அவித்துவரும் வானமிர்தம். தேவ இரத்தாசயமே தேவஇருதயம்.

தேவதிருவாய்மொழியே சாட்சியமாக, அழியும்பொன்னையும், வெள்ளியையும் கொண்டல்ல, தேவ உதிரத்தைக் கொண்டே நாம் மீட்கப்படலானோம். நமது இரட்சகர் நம்மைநேசித்துத் தமது உதிரத்தினாலே நமது ஆத்துமங்களைக் கழுவிச் சுத்திகரித்துவருகின்றார். போஷித்துவருகிறார். தமது திருஉதிரப் பேறுகளையே தேவதிரவிய அநுமானங்களினாலும், திவ்விய பூசைப்பலியினாலும் நிரந்தரம் நமக்குப் பாலித்துவருகின்றார்.

விசேஷ தேவ ஏவுதலினாலே அர்ச். பாஸ்சி மரியமதலேனம்மாள் நம்மைமீட்டிரட்சித்த விலையேறப்பெற்ற தேவஉதிரத்தை நித்தியபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொருமுறையும் வாக்குக்கெட்டாத பெறுமதி உள்ள காணிக்கையைச் சமர்ப்பிக்கிறோம்என்பாள். அந்தச் சுத்தவாளிதானே சீவியர்களுக்காகவும், மரணித்தவர்களுக்காகவும் நாளொன்றுக்கு ஐம்பதுதரம் இந்தத்திருஇரத்தத்தை ஒப்புக்கொடுத்துவருவாள். அதுநிமித்தமாய் அநேகாநேக பாவிகள் மனந்திரும்பியதாகவும், உத்தரிக்கிறஆத்துமாக்கள் விடுதலைபெற்றதாகவும் திவ்விய கர்த்தர்தாமே அவளுக்கு வெளிப்படுத்தியருளினர்.

நாம் நமக்குத்தேவையாயுள்ள விசேஷ தேவஉதவியைப் பெற்றுக்கொள்வதற்கு நிச்சயமானதோர் உபாயம், தேவதாயார்மூலமாகத் தேவஉதிரத்தை ஒப்புக்கொடுத்து வேண்டிக்கொள்வதாகும். இதுவே உத்தமமான, சித்திகரமான மன்ருட்டம் எனக் கூறேதார்ஸ் எனவும்படும் அர்ச்.மரியவியானிநாதர் சொல்லிவருவார். "என் பிள்ளைகளே! நான்சொல்வதை நன்ருகக்கவனியுங்கள். நான் ஒருதேவஅருளைப் பெற்றபோதெல்லாம் இவ்விதமாகவேபெற்றுக்கொண்டேன். இந்தஉபாயம் பரிச்சேதம் பிரதிகூலப்படவேயில்லை" என்றும் வலியுறுத்தியுள்ளார். அதனால் நாமும் "நித்தியபிதாவே! என் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களுக்காகவும், திருச்சபையின் அவசியங்களுக்காகவும் யேசுக்கிறீஸ்துநாதரின் மகாவிலையேறப்பெற்ற இரத்தத்தைத் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன்" இச்சிறுசெபத்தைத் தினமானம் அந்திசந்தி சொல்லிவருவோமாக!

# தனிநாயக சுவாமிகள் தரும் தகவல் :

மேனுடுகளிலுள்ள நூல்நிலையங்களில் இருக்கும் தமிழ்நூல்களையும், தமிழ்பற்றிய நூல்களையும் கடந்த இரண்டு மாதங்களாக நேரிற்சென்று ஆராய்ந்து திரும்பிய வண. சேவியர் எஸ். தனிநாயகம் சுவாமிகள் தமது ஆராய்ச்சிபற்றி விரிவாகத் தெரிவித்துள்ள விபரங்கள் வருமாறு :

இரண்டு மாதங்களாக ஐரோப்பாவின் மாபெரும் நூல்நிலையங்களில் தமிழ்நூல்கள்பலவற்றைக் கண்டதாகத் தனிநாயகம் சுவாமிகள் கூறினார்கள் அல்லவா? அவர்ஆராய்ந்த நூல்நிலையங்கள் லிஸ்பன்மாநகரில் இருக்கும் மூன்று நூல்நிலையங்கள், பரீஸ்நகரில் மூன்று, வத்திக்கான் நூல்நிலையம் ஒன்று.

தமது ஆராய்ச்சி சம்பந்தமாகச் சுவாமிகள் கூறியதாவது: போர்த்துக்கால் நாட்டுக்கும், தமிழ்நாட்டுக்கும் பண்டுஉள்ளதொடர்பால் பல கையெழுத்துப்பிரதிகளும், சுவடிகளும் போர்த்துக்கால்நாட்டிற்கு அனுப்பப்பெற்றன. இவற்றையெல்லாம் ஆங்கு நன்ருகப் பேணிவருகின்றனர். சுவடிகளை அழகானசெப்புகளில் வைத்துக் காப்பாற்றி வருகின்றனர். அங்கு ஒரு நூல்நிலையத்திலே 1555-ம்ஆண்டு லிஸ்பன்மாநகரில் ரோமன்எழுத்துக்களைக் கொண்டு எழுதப்பெற்ற 40 பக்கம் அடங்கிய சிறுநூலொன்று உள்ளது. அந்நூலை அச்சிடும்பொழுது அதனை மேற்பார்வையிட்டவர் கொழும்பில் கத்தோலிக்க தொண்டுபுரிந்த ஜோவாம் வில்லா கொணடேசுவாமியார். அதே நூற்றுண்டில் புவனேகபாகுவிற்கு மந்திரியாகஇருந்தவர் ஸ்ரீ ரக்ஷதாளனும் தமிழ்ப்பிராமாணர் ஒருவர்.

மேலும் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பெற்ற பலகடிதங்கள் வரலாற்று நூல்நிலையங்களில்உள்ளன. இவற்றை ஒருசிலர் படித்திருக்கின்றனர். ஆயினும்இவற்றை நன்ருகப் படிப்பதற்கும், தமிழர்வரலாற்றை எழுத இவற்றைப் பயன்படுத்துவதற்கும் தமிழ்அறிஞர் சிலர் அங்குசெல்லுதல் நலமாகும்.

லிஸ்பனிலிருக்கும் நூல்நிலையமொன்றில் என்டிறிக்செஸ் சுவாமியார் 1555-ம் ஆண்டிற்குமுன் மன்னாரில் போர்த்துக்கேய மொழியில் எழுதிய தமிழ் இலக்கணநூலைக் கண்டேன். இதுவே வேற்றுமொழியில் ஆக்கப்பெற்ற முதற்தமிழ் இலக்கண நூல் என்றுகூறலாம்.

இலங்கைக்குச் சென்றஆண்டுவந்த பேராசிரியர் மெல்லின் அவர்களின் உதவியால் பரீஸ்மாநகரில் பலஏடுகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் காணும்வாய்ப்பினைப் பெற்றேன். பரீஸ் தேசியநூல்நிலையத்தில் இன்னும் ஆராய்ந்து படிக்கவேண்டிய பலஏடுகள் உள. புதுச்சேரி அம்மன்பேரில் விருத்தம், வேங்கையுலா, மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ், சதிநூல், தேவமாதா பிள்ளைத்தமிழ், ஸ்ரீரங்கபுராணம் எனும்பலநூல்கள் அங்குஉள.

16-ம், 17-ம்நூற்றுண்டுகளில் அச்சிடப்பெற்ற பலநூல்கள் வத்திக்கான் நூல்நிலையத்தில் காப்பாற்றப்பெற்று வருகின்றன. அங்குதான் 690 பக்கம் அடங்கிய ஒருநூலைக்கண்டேன். இந்த நூல் 1587-ம்ஆண்டு பாண்டிநாட்டிலுள்ள புன்னைக்காயல் எனும்ஊரில் அச்சிடப்பெற்றது. 16-ம் நூற்றுண்டில் தமிழ்அச்சகங்கள் கோவையிலும், கொச்சியிலும், கொல்லத்திலும், புன்னைக்காயலிலும் இருந்ததற்கு அங்கு அச்சிடப்பெற்ற நூல்களே சான்ருக இருக்கின்றன.

இவ்வாறு ஐரோப்பாவின் பெரும் நூல்நிலையங்களிலும், சிறுநூல்நிலையங்களிலும், தனிமக்களிடமும் இருக்கும் ஏடுகளையும், பிரதிகளையும் பட்டியல் முறையில் குறிக்கும் பட்டியல் நூல் ஒன்று நமக்கு இன்றியமையாது வேணடும். இதனைத் தனிமகன் எவரேனும் செய்தல்அரிது. தமிழ்த்துறைகள்உள்ள சர்வகலாசாலைக் கழகங்கள் ஒன்றுசேர்ந்து இந்தத்தொண்டை நிகழ்த்தவேணடும். மேல்நாட்டிலுள்ள வடமொழிஏடுகளைத்தேடிப் பட்டியல் நூல் செய்ய முயன்ருர் சென்னைச் சர்வகலாசாலைக் கழக வடமொழிப் பேராசிரியர் திருவாளர் இராகவன் அவர்கள். இவ்வாறு தமிழ்நூல்களைப் பட்டியல்வகையில் குறிக்கத் தமிழறிஞர்ஒருவரை நம்சர்வகலாசாலைக்கழகங்கள் அனுப்பவேண்டும்.

மேலும் மேல்நாட்டு மொழிகளில் திருக்குறளின் மொழிபெயர்ப்புச் செவ்வனேசெய்து பரவுவதாகத் தெரியவில்லை. இத்தகைய தமிழ்நூல்களையும், தமிழ்பற்றிய நூல்களையும் தமிழ்மக்கள் முயன்றுபரப்பினுல்தான் இத்தொண்டை நன்ருக நிகழ்த்தலாம். மேல்நாட்டார் எதிர்காலத்தில்இதனைச் செய்வார்களென்று எதிர்பார்ப்பது தவறு. அரசியல்முறையில் தமிழ்நாட்டுடன்உள்ள தொடர்புகள் மேல்நாட்டாருக்குக் குறைந்துகொண்டே வருகின்றன. போர்த்துக்கேயர் தமிழ்நாட்டில் இருந்தகாலத்தில் தமிழை ஒருவாறு பயின்றுவந்தனர். ஆனல், இன்று போர்த்துக்காலில் தமிழறிஞர் இல்லை. விரைவில் ஆங்கிலநாட்டிலும், பிரான்சுநாட்டிலும் தமிழார்வம் குறையும்என்பதற்கு அறிகுறிகள் உள்ளன. எனவே, தமிழ்மக்கள் தமிழ் அறிவைப் பரப்பினுல்தான் மேல்நாட்டார் தமிழின்பெருமையை ஒருவாறு அறியும்வழியைக் காண்பார்கள்.

# "குவாடலூப் மாதா" கோவில்

சிலவாரங்களுக்கு முன்புகூட அந்த இடத்துக்குப் பொதுமக்கள்போக அஞ்சுவர். பகலில் சனநடமாட்டம் இருக்கும். இரவில் பயங்கரஅமைதி நிலவும்அங்கே. காரணம் திருடர்பயம்—அருகிலே சுடுகாடு. இந்தஇடத்தில் இம்மாதம் நான்காம்தேதிமாலை சனசமுத்திரம் அலைமோதியது. பக்தர் வெள்ளம் கரைபுரண்டோடியது. இந்தவைபவத்தில் பலமதத்தவரும் கலந்துகொண்டார்கள். விழிகளுக்கு விருந்தாக, கருத்துக்கு மருந்தாக அமைந்திருந்தது அந்தக்காட்சி.

அன்றுமாலை ஐந்துமணியளவில் திரிகோணமலை சின்னக்கடைப்பகுதியிலே வியாகுலமாதாகோவிலுக்குச் சிறிது தூரத்தில் "குவாடலூப் மாதா" கோவில்கட்டடத்துக்கு அத்திவாரக்கல்லைத் திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளன்னி ஆண்டவர்அவர்கள் வைத்தபொழுதுதான் இந்த அலங்கிர்தகரமானகாட்சி நடைபெற்றது. சுமார் ஒன்றரைலட்சம் ரூபாசெலவில்கட்டப்படவிருக்கும் இப்புதிய கோவில் சிறந்தமுறையில் உருவாவதற்குவேண்டியமுயற்சிகளை வண. ஜோண் பீற்றர்சுவாமியார் எடுத்துவருகின்ருர். இவரது அயராதஉழைப்பும், தளராத நம்பிக்கையும் இந்தஆக்க வேலையில் அதிகம் பயன்படும்என்று எதிர்பார்க்கலாம். கல்லாற்றிலே இவரதுமுயற்சியால் அர்ச். அருளானந்தர்கோவில்கட்டப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. திரிகோணமலை மேற்றிராணியார் சமீபத்தில் மெக்சிக்கோநாடு சென்றிருந்தபொழுது, இக்கோவிலைக் கட்டுவதற்கென அவருக்கு அங்கு பணம் கொடுக்கப்பட்டதாக அறியக்கிடக்கிறது. இப்பணத்திலிருந்துதான் இக்கோவிலைக் கட்டுவதற்கென நகராண்மைக் கழகத்திடமிருந்து பூமிவாங்கப்பட்டது. மெக்சிக்கோவில் இருக்கும் "குவாடலூப் மாதா" கோவிலில்தான் திரிகோணமலை மேற்றிராணியார் ஞானஸ்நானம்பெற்ருர்.

புதியஉலகம் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில், செவ்விந்தியர்களைக் காட்டுமிராண்டிகள்என அங்கு குடியேறிய ஐரோப்பியர்கள்மதித்து நடத்திவந்தனர். அங்கே நிறபேதம் தாண்டவமாடியது. இனவெறி தலைதூக்கியது. இனஒதுக்கல்முறைகையாளப்பட்டது. (இன்று தென்னபிரிக்காவில் நடைபெறுவதைப்போல) அங்கு வாழ்ந்த சுதேசிமக்கள் சுரண்டப்பட்டனர், சூறையாடப்பட்டனர். அடிமைகளாக நடத்தப்பட்டனர். இதைக்கண்ட தேவதாய் நிறபேதம்—சாதிபேதம்என்பவற்றைக் கண்டித்து, எல்லோரும் சரிசமம்என்ற உரிமையை நிரூபித்து, தாம் சகலருக்கும் அன்னைஎன்பதை வெளிப்படுத்தக் குவாடலூப் என்ற ஊரில் ஒருசெவ்விந்தியப் பையனுக்கு முன் செவ்விந்தியத் தாய்உருவத்தில் காட்சிதந்தாள்என்று சரித்திரம் கூறுகின்றது.

இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வந்தகாலத்தில் கோப்பாய், கொழும்பு, காலிஆகிய மூன்று இடங்களிலும் "குவாடலூப் மாதா" கோவில்கள் நிறுவினர். காலஒட்டத்தில் யாழ்ப்பாணம், காலிஆகிய இடங்களில் நிறுவப்பட்டகோவில்கள் அழிக்கப்பட்டன. கொழும்பில்நிறுவப்பட கோவில் புரொட்டஸ்தாந்தகோவிலாக ஒல்லாந்தால் மாற்றியமைக்கப்பட்டது. இதுவே இன்றிருக்கும் வூல்வ்வெண்டால் தேவாலயம் (ஆட்டுப்பட்டித் தெருக் கோவிலென அறியபடுவது). கோப்பாயிலே ஒல்லாந்தால் அழிக்கப்பட்ட கோவிலின் கற்கள்சில சேகரிக்கப்பட்டு திரிகோணமலையில் கட்டப்படவிருக்கும் புதியகோவிலில் பதிக்கப்படவிருக்கின்றன. "குவாடலூப்மாதா" வின்திருநாள் ஒவ்வொருவருடமும் மார்கழிமாதம் 12-ந் திகதி கொண்டாடப்படும்.

—எஸ். ஆர்.

● பிரான்சுக்கும், இத்தாலிக்கும் வருகாலத்தில் பண உதவி செய்யும் விஷயமாய்ச் செய்யப்பட்டுள்ள தீர்மானத்தைப்போலவே சீனவை ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தில் சேர்க்க ஆதாவளிக்கும் நாடுகளுக்கும் பண உதவி நிறுத்தப்படுமென்று அறிவிக்கும்படி அமெரிக்கஜனதிபதிக்கு அதிகாரம் அருளப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமை ஆசிரியர்களுக்கு :

9-7-54-இல் ஞானோபதேசக் காட்சியைப்பற்றி அனுப்பியகடிதத்தில் சித்திரவகையைச்சார்ந்த பொருட்கள் 22 அங். × 15 அங். அளவுக்குஉட்பட்டனவாக இருக்கவேண்டுமெனக் குறிக்கப்பட்டிருந்தது. அதை 30 அங். × 25 அங். அளவாக மாற்றிக்கொள்ளவும்.

* * *

## TO THE PRINCIPALS & HEAD TEACHERS

In connection with the Catechetical Exhibition, the information given in my letter of 9-7-54, regarding the size of Paintings and Charts should be altered to read 30 ins. × 25 ins. instead of 22 ins. × 15 ins.

T. A. J. Mathuranayagam,
Chairman,
Catechetical Committee.

Jaffna, 15-7-54.

## கம்யூனிஸ்தர்களும் ருஷியபணமும்

எங்கள்நாட்டை ருஷியஏகாதிபத்தியத்துக்கு விற்பதற்காக இங்குள்ள கம்யூனிஸ்தர்களுக்கு ருஷியாவிலிருந்து பணஉதவி கிடைக்கிறதென்று ஆசியப்பிரதமர்கள் மகாநாட்டில் தாம் கூறியதாகக் 'கொழும்பிலே கொச்சிக்கடையில்நடந்த ஒருபொதுக்கூட்டத்தில் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் கூறியிருக்கின்றார்.

கொழும்பு நகரசபைத் தேர்தலில் திரு. வி. சுகததாஸா (யூ. என். பி.) திரு. ஏ. அபெயகுணசேகரா (தொழிற்கட்சி) இருவரையும்ஆதரித்து இக்கூட்டம் நடைபெற்றது. அவர்மேலும் கூறியவிடத்து: "செக்கோசிலவாகியாவின் இறக்குமதிப் பொருட்களிலிருந்து கிடைக்கும் சம்பாத்தியத்தில் நூற்றுக்குப் பத்துவீதம் இங்குள்ள கம்யூனிஸ்தர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று இங்குள்ள சிலவர்த்தகருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. லண்டனில் காணப்பட்ட சில பத்திரங்களிலிருந்து இத்தகவலை அரசாங்கம்கண்டுபிடித்தது. இலங்கைக்குவரும் கம்யூனிஸ்த புத்தகங்களெல்லாம் துறைமுகத்தில்வைத்து எரிக்கப்படவேண்டுமென்று நான் உத்தரவிட்டபிறகு சுவரில்கீறும் இவர்களின் பணப்பெட்டி காலியாகிவிட்டது" எனக்கூறி யூ. என். பி. அபேட்சகர்களுக்கு வாக்களிக்குமாறு மக்களை வேண்டிக்கொண்டார்.

பின்னர் திரு. ஆர். பிரேமதாஸா, எம். எம். சி. அவர்கள் பேசுகையில்: கம்யூனிஸ்தகட்சிக்குஎதிராகப் போடப்படும் ஒவ்வொருவாக்கும் ஸ்ரீலங்காவின் நல்வாழ்வுக்குப் போடப்படும் வோட்டென்று குறிப்பிட்டார்.

தொழில்மந்திரி டக்றர் எம். சி. எம். கலீல் அவர்கள் பேசுகையில்: "இன்று இலங்கையில் சுதந்தரத்துக்கும், அடிமைத்தனத்துக்குமிடையில் ஒரு போராட்டம் நடைபெறுகிறது; இது ஒரு நெருக்கடியான கட்டமாகும். சுலோகங்களைக் கோஷிப்பவர்களைப் பார்த்து ஏமாறாதீர்கள்; உங்கள் சிந்தனைசக்தியைப் பாதுகாத்துத் தலைநகரத்தை நாம்இழந்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார்.

திரு. ஆனந்திஸ டீஅல்விஸ் பேசுகையில்: இடதுசாரிகளுக்கிடையே இன்றுநடைபெறும் சண்டைகளைப் பார்க்கும்போது அவர்களுக்கு அதிகாரம்போனால் இலங்கை அழிந்துவிடுமென்றும், சனநாயகத்துக்கும், கம்யூனிஸத்துக்கும் இடையில் எதுசிறந்ததென்பதை மக்கள் தேடிப்பிடிக்கவேண்டுமென்றும் கூறினார்.

## கம்யூனிஸ்தர்களைத் துரத்துங்கள்

சென்னைமுதன்மந்திரியாரான ஸ்ரீகாமராஜ்அவர்கள் குடியாத்தம்தொகுதியில் சென்ற 11-ந்திகதி நடத்திய தீவிர தேர்தற்பிரசாரத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

"இந்தியாவிலே கம்யூனிஸ்தர்களுக்குப் பொதுமக்களிடம் செல்வாக்குக் கிடையாதென்று நிரூபிப்பதற்காகக் குடியாத்தம்மக்கள் காங்கிரஸ்அபேட்சகர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

"நாட்டிலுள்ள தீயசக்திகளைக் காங்கிரஸ் எதிர்த்துப் போராடிவருகிறது. இந்தஸ்தாபனம் பலவீனமடைந்தால் நாட்டுக்கே ஆபத்தாகும. ஆகையால், காங்கிரஸைப் பலப்படுத்தவேண்டியது மக்கள்கடமை.

"கம்யூனிஸ்தர்களின் அந்தரங்க எண்ணம மக்களை ஏமாற்றுவதுதான் என்பதை உணரவேண்டும். பொய்ப்பிரசாரம் செய்வதே அவர்களின் பிழைப்பு. இதைச செய்வோம், அதைசசெய்வோமென்றுகூறி மக்களை வசியப்படுத்தப் பார்க்கிறார்கள். வறுமை, அறியாமை, மற்றும்சமூகத்திலுள்ள குறைபாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதே அவர்களின்வேலை. இந்த முறைகளைப் பின்பற்றுகிறவர்கள் நீண்டநாள் வெற்றிபெறமுடியாது. சத்தியம் வெல்லுவது நிச்சயம். எது நியாயம், நேர்மையானதுஎன்பதை மக்கள்உணரச் சிறிதுகாலம்பிடிக்கலாம். ஆயின், உண்மையைஉணர்ந்தால் காங்கிரஸைப் பொதுமக்கள் பூரணமாக ஆதரிப்பார்களென்பதற்குச் சந்தேகமே இல்லை. காரணம், மற்றெந்தக்கட்சியாலும் நாட்டில், அமைதியையும், அபிவிருத்தியையும், சுபிட்சத்தையும் உண்டுபண்ண முடியாது.

"மஸ்கோவிலிருந்துகம்யூனிஸ்தர்கள் பணஉதவி பெறுகிறார்கள. காங்கிரஸைப்பற்றி அவதூறுகூறி அதை மறைத்துவிடமுடியாது. கம்யூனிஸ்தர்கள் ஒருதடவை அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டார்களென்றால் மக்களின்சுதந்திரம் பறிபோய்விடுமென்று சொல்ல வேண்டியதில்லை" என்று முடிவாக எச்சரிக்கை செய்தார்.

## எமது மலைநாட்டுப் பிரயாணம்

இயற்கை அழகுகள் பலவற்றாலும் நிறைந்துவிளங்கும நமது இரத்தின துவீபத்தின் மலைநாட்டுக் காட்சியைக் கண்டுமகிழஎண்ணி 27-6-54 ஞாயிறுவாரம் காலை 6 மணிக்குப் பாடசாலை ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் மோட்டர்வாகனமூலம் புறப்பட்டு அனுராதபுரத்தை அடைந்து திவ்வியபூசைகண்டு, பின்னர் அங்குள்ள முக்கியமான புராதனகட்டடங்களைப் பார்வையிட்டுக்கொண்டு குருநாகலை அடைந்து அங்குமுள்ள பிரதானகட்டடங்களையும், தேவாலயத்தையும தரிசித்தபின் சாயந்தரம் 4 மணிக்குப் பேராதனைச் சர்வகலாசாலையை அடைந்தோம். அடைந்ததும் எமது உடல் ஓர்விதகுளிரினால் சற்றேஉற்சாகம் அடைந்தது.

ஆ! என்ன கொழுமை! மகாவலிகங்கை ஓரத்தே, மலையடிவாரத்தே அமைக்கப்பட்டிருக்கும் பிரமாண்டமான கட்டடத்தின் கெம்பீர தோற்றம்தான் என்னே! பல மேல்மாடிகளைக்கொண்டதாய் அங்குள்ள விடுதிச்சாலையில் வதியும்மாணவர்களின் உல்லாசம்தான் என்னே! இலங்கையின் உந்நத கல்விச்சாலை இதுஎன்பது சொல்லாமலேவிளங்குகிறதே. ஒவ்வோர் மாணவனுக்கும் ஒவ்வோர் தனிமையான அறை இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் சகலவிதமான வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன அம்மட்டா அவர்கள் விஞ்ஞானம்பயிலும் சாலை, தொழில்பயிலும சாலை, விரிவுரையாளர்களால் கல்விபோதிக்கப்படும் சாலை, ஓய்வுநேர இளைப்பாற்றிச்சாலை ஆகியவைகளையுங்கண்டு மிகமகிழ்ச்சிபடைந்தோம். இன்னும் அவர்களது சமையற்சாலையைச் சற்றே நோக்கினோம். மின்சாரஉதவியுடன சமையல்நடைபெறும் விதத்தையும், பொருட்களைச் சுத்தம்செய்யும் விஞ்ஞான கருவிகளையும் கண்டுதிரும்பியபோது, ஆ, என்ன எழில் அவர்களது விளையாட்டிடம்! அதைப்பார்த்ததும் எமக்குண்டான மகிழ்ச்சிக்கோ எல்லையில்லை. இவற்றை எல்லாம் கண்டுகளித்துக்கொண்டு கண்துயிலச்சென்றோம்.

மறுநாட்காலை மலைஉச்சியில் நின்று இயற்கையின் எழில்மிகு மலைக்காட்சியைக் கண்டுகளிப்புற்று அவ்விடமிருந்து போதனைப் பூங்காவனஞ் சென்றோம். அதன் பிரவேசபாதையை அடைந்ததும் அனுமதிபெற்று உட்சென்று வாகனத்தைவிட்டிறங்கிச் சோலையின் ஓர்புறத்தே வரிசையாய் நடக்க ஆரம்பித்தோம். ஒவ்வோர் இனத்தையுஞ்சேர்ந்த பல அகவளர் விருட்சங்கள் வரிசை வரிசையாகக் காணப்பட்டன. இன்னும் பிறநாடுகளைச்சேர்ந்த அகவளர்விருட்சங்கள், பலகனிதருமரங்கள் புடைசூழ இனிதே அமைந்திருந்தது பூங்காவனம். பூம்பொழிலில புகுந்ததும் பலபுஷ்பங்களை முத்தமிட்டோம். இன்பத்துடனும், இனியநறுமணத்துடனும் கம்மெனவீசிய இளந்தென்றல் எமதுகளையைத் தீர்த்து மகிழ்ச்சியை உண்டாக்கியது. இரத்தினக்கம்பளம் விரித்தாற்போன்ற பலவர்ணத்தளிர்கள் படிப்படியாய் அமைக்கப்பட்டிருந்தன. பந்தர்களாக அமைக்கப்பட்டிருந்தன பல பூம்பாதைகள். பின்னர் எழில்மிகு இப் பூஞ்சோலையைவிட்டுப் பிரியமனமற்றவர்களாய்ப் பிரிந்து கண்டியை அடைந்து, அங்குள்ள தாலதமாளிகை, நூதனபொருட்காட்சிச் சாலை, போகாம்பரவீவ, இன்னும்பல சரித்திர பூர்வமான சிலைகள், கட்டடங்களையும், பட்டணத்தையும் பார்வையிட்டுக் கடுகாஸ்தோட்டைக்குச் சென்று, அங்குள்ள தொங்குபாலத்தைத் தாண்டி மகாவலிகங்கையில் நீராடிக் களையாறினோம்.

மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு மாத்தளையைஅடைந்து அங்கே றப்பர், தேயிலை, கொக்கோவாத் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டுக்கொண்டு கம்பளையைஅடைந்து கற்கோயிலை(Roch-Temble) யும், மகாபராக்கிரமவாகு காலத்தில் அமைக்கப்பட்ட சித்திரங்களையும், ஓவியங்களையும் கண்டு மட்டில்லா மகிழ்ச்சியுற்று அங்கு சிலமணிநேரம் தங்கியபின் புறப்பட்டுச் சிகிரியாவைஅடைந்து, அங்கே காசியப்பனின் மறைவிடமான மலைக்குகைகளையும், அதிஉயரத்தே அமைக்கப்பட்டுள்ள சித்திரவேலைப்பாடமைந்த ஓவியங்களையும் பார்வையிட்டுப் பின்னர் மிகுந்தலை மலையைச் சேர்ந்தோம். அங்கே மிகுந்தனின் படுக்கையைப் பார்வையிட்டு மலையினின்றுமிறங்கிப் புதைபொருள் ஆராய்ச்சிக் கட்டடத்தைப்பார்த்துக் கண்களைப்படைந்த சமயம் சூரியனும் தன்கதிர்களை மறைத்து 29-ந் திகதி செவ்வாயைமுடிக்க எத்தனிக்குஞ்சமையம் எமது மோட்டர் வாகனம் நகர்ந்துசென்று சடுதியாக ஓர் பாடசாலைமுன் தரித்து நின்றது. அதில்நின்று இறங்கிப்பார்த்ததும் அப்பாடசாலை எம நேசியகுளக் கத்தோலிக்கபாடசாலைஎன அறிந்து பயணப்பெட்டிகளை எடுத்துக்கொண்டு ஆலயம்சென்று அன்னைகப்பலேந்திமாதாவிற்கு நன்றித்துதிகூறி எமதுஇல்லம் செல்லாநின்றோம். சுபம்!

— ம. ஞானவாசகம்



# பெரியகட்டு அர்ச். அந்தோனியார் திருநாள்

## ஆவணி ஞாயிறு 1-ந் திகதி.

ஆயத்தத் திரிதினங்கள்: ஆடி 29, 30, 31.

பகற்கோச்சிகள் பெரியகட்டுக் கோவிலடியில் ஆடி 29-ந்திகதி தொடக்கம் ஆவணி 2-ந் திகதி மட்டும் நிற்பாட்டப்படும்.

மடுறோட், கட்டளைச் சுவாமியார்.

## கம்யூனிஸத்தின் சரிவு

கடந்தகாலங்களிலே வைகாசிமாதத்தின் முதற்தேதியன்று ஹொங்கோங் நகரிலுள்ள கம்யூனிஸ்தர்கள் மிகுந்த உற்சாகத்துடன் 'மேதின விழா' கொண்டாடி வந்தார்கள். ஆனால், இந்தவருடம் அத்தனை ஆடம்பரம் இல்லை. சீனாவிலுள்ள தங்கள் சகோதரதொழிலாளிகள்படுங் கஷ்டங்களைக் கண்டுங் கேட்டும் ஹொங்கோங்கிலுள்ள சீனத்தொழிலாளிகள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளார்கள்.

அன்றுதினம் நகரின் நாடகக்கொட்டகைஒன்றில் நடைபெற்ற ஓர் பொதுக்கூட்டத்தில் பேசியவர்களிற் பலர் சீனாவில் தொழிலாளிகள்படும் துன்பத்தைப்பற்றிப் பேசினர். 'ட்றேடர்ஸ் யூனியன் கவுண்சில்' என்ற சங்கத்தின் தலைவராகிய திரு. ஹொய்-சியூ பேசுகையில் பின்வருமாறு கூறினார்:

"பல லட்சக்கணக்கில் சீனமக்கள் அடிமைத்தனத்தில் ஆழ்த்தப்பட்டுள்ளார்கள். ஹொங்கோங்கில் கடந்த மார்கழிமாதம் தீப்பற்றியபோது ஏற்பட்ட சேதத்தால் பாதிக்கப்பட்டுவருந்தியவர்களுக்கு அரிசியும், பணமும் அனுப்பிய சீனஅரசாங்கம் சீனாவில் பட்டினியும் பசியுமாய்க் கிடக்கும் பல லட்சக்கணக்கான மக்களைப்பற்றிக் கவலைப்படா திருப்பதேன்?"

சீனாவிலுள்ள தொழிலாளர்யூனியனில் அங்கத்தினராய் இருந்தவரும், 1953-ம் ஆண்டு ஹொங்கோங்குக்குத் தப்பியோடியவருமான ஸ்ரீமதி காம்-குவோங் அக்கூட்டத்திற் பேசுகையில் பின்வருமாறு கூறினார்: "நான கம்யூனிஸ்தர்களால் ஏமாற்றப்பட்டேன். இச்சந்தர்ப்பத்தில் சீனாவின் உண்மையான நிலையை உங்களுக்கு வெளிப்படுத்துவது எனதுகடமையாகின்றது. சீனாவில்இப்பொழுது தொழிலாளர்கள் 8மணிநேரமல்ல, 12மணிநேரம் வேலைசெய்து வருகின்றார்கள். இந்தப் 12 மணி நேரவேலை ஒருபுறமிருக்க, கம்யூனிஸ்த தத்துவங்களைப் பற்றிப் பாடங்கேட்பதில் ஒருமணி நேரமோ, ஒன்றரைமணி நேரமோ அவர்கள் 'செலவிடவேண்டும். இது அன்றி, கோறியாவில் போராடியவர்களுக்குப் பணம்அனுப்புவதற்காக ஒவ்வொருதொழிலாளியினதும் சம்பளத்தில் 20 சதவிகிதம் பிடிக்கப்பட்டது."

* "அன்சஸ்" சபை என்பது என்ன?

அவுஸ்திறேலியாவும், நியூசீலாந்தும், அமெரிக்க ஐக்கியதேசமும் ஒன்றுசேர்ந்து செய்துள்ள தென்கிழக்கு ஆசிய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் நிர்வாகசபையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

நேற்றுப் பின்னேரம் சகாயநாதனைச் சந்திக்கச் சென்றேன். அவன் விருந்தையின் மூலையிலே கையில் மாபிள் வைத்துக் கொண்டு முணங்கியபடி இருந்தான். தாய் ஒருகையில் வடையும், மற்றக் கையில் மாம்பழமும் வைத்துக்கொண்டு: "இந்தா தம்பீ, சாப்பிடு; பசிக்க வில்லையா?" என்று கேட்டுக் கொண்டு நின்றாள். என்னைக் கண்டதும்: "அண்ணா, என்னை மடுவுக்குப் போக அம்மா விடமாட்டாவாம்; நீங்க ஒருக்காச் சொல்லுங்க" என்றான் நாதன்.

நாற்காலியில் உட்கார்ந்தேன். ஒருதட்டில் வடையும், சீவிய மாம்பழமும், லோட்டாவில் ரீயும் கொண்டுவந்து எனக்குமுன் வைத்துவிட்டு, வாசற் கதவண்டை நின்றாள் நாதனின் தாய்.

"இது மரியாயின் புனித வருடம்; தேவதாயாரிலே பத்தியை வளர்க்கும்படி அவவைப் பற்றி அறிந்துகொள்வது மாத்திரமல்ல, அவவுடைய பரிசுத்த தலங்களைத் தரிசித்து, அநேக ஞானப் பலன்களை அடையவும் வேண்டும்என்று பரிசுத்த பிதா தமது நிருபத்தில் (பிரகாச முடி) கூறியிருக்கிறார். ஆகையால் தான் பாடசாலைச் சிறுர்கள் எல்லோரும் மடுவிற்குப் போகிறார்கள்" என்றேன்.

"இதுகளைத் தனிய அனுப்பப் பயமாய் இருக்குது" என்றாள் நாதனின் தாயார்.

"உபாத்திமாரும், குருமாரும் கூடப் போகிறார்கள்; ஆகையால், அவர்கள் கண்காணிப்பார்கள்."

"தம்பி தான் போறன் என்கிறான்; தங்கச்சியார் கேள்விப் பட்டால் அவ எல்லாருக்கும் முன் ஒற்றைக் காலில் நிற்பா, தான் போறதென்று."

"அதற்கென்ன, இரண்டுபேரையும் அனுப்புகிறதுதானே."

"இரண்டிற்கும் செலவிற்கு எங்கே போறது?"

"றெயில் சலார் குறைவுதானே; அதுவும் அல்லாமல் விரல் அளவு தானே வீக்கம்."

"நீங்களும் நாதனுக்காகத் தான் பாடுகிறீர்கள்; என்றாலும் ஒருபெரிய மனிதன் சொல்லுவதை நான் தட்டவில்லை; ஏதோ மாதா வழிசெய்வா என்று நம்பியிருக்கிறேன்."

நாதனின் முகம் மலர்ந்தது; இருபேருமாகப் பட்சணங்களைப் புசித்தோம்.

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## எழுந்திடுவாய்!

'ஜெயம்'

1

இன்னிசைக் கீதங்கள் கேட்குது பூமியில்
ஈதோ எழுந்திடு என்மகனே!
பொன்னிறச் சூரியன் பூத்தது கீழ்த்திசை
புனசிரிப் போடெழு என்மகனே!

2

நானில மெங்கணும் தேமலர் பூத்திட
நன்மணம வீசுது என்மகனே!
ஆனிரைக் கன்றுகள் துள்ளி எழுந்தன
ஆனந்த மோடெழு என்மகனே!

3

காரிருள் மூடிய பூமி சிரித்தது
காணச் சிரித்தெழு என்மகனே!
பாரினி லோர்புது நாளும் உதித்தது
பார்க்கக் குதித்தெழு என்மகனே!

4

வண்டினம் பூக்களுக் கங்குமிங் குமோடி
வந்தனம சொல்கின்ற சுந்தரத்தைக்
கண்டு நிறைந்திடும் பண்ணிசை மாந்திடக்
கண்கள் மலர்ந்தெழு என்மகனே!

5

தூக்கமும் துன்பமும் ஏக்கமும் போயின
துள்ளி எழுந்திடு என்மகனே!
ஊக்கமு டன் இளந் தென்றலைப் போலிங்கு
ஓடி எழுந்துவா என்மகனே!

## பெருகிய அப்பம்

யேசுவின் பிரசங்கத்தைக் கேட்கத் திரளான சனங்கள் வந்திருந் தார்கள். அவர்கள் பட்டினி என்று அறிந்து, யேசு சீஷரை அழைத்து: "இந்தச் சனம் மூன்று நாட்களாக என்னுடன் இருந்துவிட்டார்கள்; அவர்களுக்கு மெத்தப் பசி; வீட்டுக்கு அனுப்பினுல் களைத்து விழுந்து விடுவார்கள்; சிலர் தொலைவி லிருந்து வந்தவர்கள்; ஏதும் சாப்பிடக் கொடுங்கள்" என்றார்.

இந்த வனாந்தரத்திலே இத்தனை சனத்துக்கும் சாப்பாடு தேடுவது எப்படி? என்றார்கள் சீஷர்கள். உங்களிடம் எவ்வளவு அப்பம் இருக்கிறது என்று யேசு விசாரித்தார். ஏழு இருக்கிறது என்றார்கள்.

யேசு சனங்களை உட்காரச் சொன்னார். பின்பு அப்பத்தை ஆசீர்வதித்துச் சீஷருக்குக் கொடுத்துச் சனங்களுக்குப் பரிமாறும்படி கேட்டார்.

சனங்கள் தாராளமாய்ச் சாப்பிட்டபின் ஏழு கூடைகளில், அப்பம் இன்னும் மிஞ்சி இருந்தது. சாப்பிட்டவர்களின் தொகை நாலாயிரம் இருக்கும்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## அண்ணாவின் குறிப்புரை

### பாட்டு இயற்றுங்கள்

கல்வியைப்பற்றிப் "பொன்" பாடிய பாவடி போன்று மூவர் பாடி அனுப்பியிருக்கின்றனர். இன்னும் வருமென அண்ணா காத்திருக்கிறார்.

"கண்டுபிடியுங்கள்" என்பதற்கும், "மாறுபட்டுநிற்கும் சொற்றொடர்"ரை இடம்மாற்றி அமைப்பதற்கும், கணிதப்பகுதிக்கும் தம்பி, தங்கைமார் புதிதாக அனுப்பியிருக்கின்றனர். தகுதி கண்டு அவை வெளியிடப்படும்.

☞ கூடியமட்டும் போஸ்ற் காட்டில் விடை அனுப்புங்கள்.

## தேவனைச் சுமந்து சென்ற குதிரை

றுடோல்வ் என்றபிரபு ஒருநாள் தமதுசிநேகிதருடன் குதிரைமீதேறி வேட்டைக்குச் சென்றார். அவர்மலைகளைத்தாண்டி ஓர்ஆற்றுக்குக் கிட்ட வந்தபோது கரையிலே ஓர்குருவானவர் நிற்கக்கண்டார். "சுவாமி! நீங்கள் இந்தஆற்றைக் கடந்து அக்கரைக்குப்போகவா ஆசிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஆம், மகனே! மரணத் தருவாயில் இருக்கும் ஒருவருக்குக் கடைசித் தேவதிரவிய அனுமானமும், திவ்விய நற்கருணையும் கொடுக்கவேண்டி யிருக்கிறது; ஆனுல், இந்தப் பாலத்தைக் கடந்து செல்ல ஒருவழியும்காணுது திகைத்து நிற்கிறேன்" என்றார் குருவானவர்.

உடனே பிரபு கடிவாளத்தைத் தளர்த்திக் குதிரையை நிறுத்தினுர். "இங்கே எனது குதிரையில் ஏறிப் போங்கள் சுவாமி; அது மிகவிரைவாக உங்களை நோயாளியிடம் சேர்க்கும்" என்றார்.

உடனே குருவானவர் குதிரையில் ஏறித் திவ்வியநாதரையும் கொண்டு சென்றார். நோயாளியின் வீட்டை அடைந்தார். பாவசங்கீர்த்தனம், அவஸ்தைப்பூசுதல், நற்கருணையாவும் அருளப்பட்டன. பின்னர் அவனுக்காக முழந்தாள் இட்டுச் செபம்செய்தார். எல்லாம்முடிந்ததும் திரும்பவும் குதிரையில்ஏறி வீடுபோய்ச்சேர்ந்தார்.

அடுத்தநாள் அந்தப்பிரபுவின் குதிரையுடன் சுவாமியார் அவருடைய மாளிகை சென்று: "பிரபுவே! இதோ உம்முடைய குதிரை; நேற்று நீர் எனக்குச்செய்த அந்தப்பேருதவிக்காகத் தேவன் உம்மை ஆசீர்வதிப்பார்" என்றார்.

"என் தேவனும், ஆண்டவருமானவரைச் சுமந்து சென்ற இந்தக் குதிரையில் இன்றுதொட்டு நான் சவாரி செய்யத் தகுதிஅற்றவன்; இனி இது எனக்குச் சொந்தமானது அல்ல; சுவாமி! நீங்களே இந்தக் குதிரையைக் கொண்டுபோய்த் தேவனுக்கும், அவர்திருச்சபைக்கும் சொந்தமாக வைத்துப் பாவிக்கலாம்" என்றார்பிரபு.

பிள்ளைகளே! இந்தப்பிரபுவின் விசுவாசத்தைக் கவனித்தீர்களா? திவ்விய சற்பிரசாதத்தில் தேவனும், மனிதனுமாய் வீற்றிருக்கும் எங்கள் ஆண்டவர் முன்னிலையில் நீங்கள் எப்படிநடந்து கொள்ளுகிறீர்கள்? உங்கள்விசுவாசம் எப்படிப்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

— M. J. M.

## சுரூபப் பரிசில்

(எல். பி.)

(முன் தொடர்ச்சி)

வழமைபோல டக்றர்டவ்வி ஆஸ்பத்திரியைச்சுற்றிப் பார்வையிட்டுவந்தார். அன்று தமதுமகள் கத்தறீன் நோயாளரைச் சந்திக்கச் சந்தர்ப்பம் அளித்தார். அன்றுமுதல் ஓர்நோயாளியைச் சந்திப்பது அவளுடைய வழக்கமாகிவிட்டது. அந்த நூதன நோயாளி தன்னைத் தானே சபித்துக் கொண்டு இருந்தான். இந்த ஏழை நோயாளி எந்த வகையிலும் தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்படச் செய்துவிட வேண்டுமெனக் கத்தறீன் பிரதிக்கினை செய்துகொண்டாள். சிலநாட்களுள் அவளது இரக்கம் நிறைந்த போக்கு அந்தப் பாவியைக் கவர்ந்து விட்டது. அவனும் தான் ஒரு மகாபாவி என்பதை அவளுக்கு வெளியிட்டான். அவன் முதல்நன்மை பெற்றபின் ஒருமுறையாவது பாவசங்கீர்த்தனம் செய்தவன் அல்ல. கடவுள் மிகுந்த கருணை உள்ளவர்; ஆனுல், அவர் பெரும் பாவியாகிய தனக்குப் பாவ மன்னிப்பு அருளுவார் என்ற நம்பிக்கையை அவன் அறவே இழந்து விட்டான்.

அதனுல், கடவுளுடைய இரக்கத்தில்அவனுக்கு நம்பிக்கையை வருவிக்க வேண்டிய அவசியத்தைக் கத்தறீன் உணர்ந்தாள். அதற்கு அவள் ஓர்நல்ல வழியைக் கண்டுபிடித்தாள். ஓர் அற்புத பரவணிக்கத்தை அவன் தரித்திருந்த உடையில்அணிந்தாள். "இதோ பார்! யேசுவின் திரு இருதயத்தை; இந்த இருதயம் இன்னுமே உன்னை நேசிக்கிறது" என்று கூறித் திரு இருதயச்சுரூபம் ஒன்றை அவனுக்குவெகுமதி பண்ணினுள்.

"நான் படு பாவி; கடவுள் என்னை ஒருபோதுமே மன்னிக்க மாட்டார்" என்று அந்தநோயாளி மனந் தளர்ந்து கூறினுன்.

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தறீனே கடுகளவேனும் தன் மன உறுதி தளராதவளாய், அவனை நோக்கிச் சொல்லுகின்றாள்: "ஓர் காலத்தில் ஓர்பெண் இருந்தாள். அவள் கணக்கற்ற கெட்ட பாவங்கள் செய்திருந்தாள். ஓர்நாள் அவள் ஒரு புட்டி பரிமள தைலத்தை எடுத்துக் கொண்டு ஆண்டவரிடம் சென்றாள். அவருடைய பாதங்களின்மேல் அதை ஊற்றினாள். பிறகு தனது பொன்மயமான கூந்தலால் அப் பாதங்களைத் துடைத்து உலர்த்தினாள். தனது சீர்கெட்ட பாவங்களை நினைந்து மனம் வருந்தினாள். கண்ணீர் விட்டுக் கதறினாள். ஆண்டவர் மனம் இரங்கினார். அவளுடைய பாவங்களை மன்னித்தார்" என்று கூறிவிட்டுத் தனது வீட்டுக்குத் திரும்பினாள்.

மறுநாள் கத்தறீன் நோயாளியின் படுக்கை அருகில் சென்று உட்கார்ந்தாள். அவள் கரத்தில் ஓர்பரிமள தைலப் புட்டி இருந்தது. அவள் நோயாளியை விழித்து: "இதை எடுத்துக் கொள்; உன் ஆண்டவரின் பாதங்களில் நீயும இதனை ஊற்றலாம்; 'எனது பாவங்களுக்காக மனஸ்தாபப் படுகிறேன்' என்று நீயும் அவருக்குச் சொல்லு; அவர் உனது பாவங்களை மன்னிப்பார்" என்று சொல்லிப் பரிமள தைலத்தை அவனிடம் கொடுத்துத் தான் வெகுமதிபண்ணிய திரு இருதய ஆண்டவரின் சுரூபத்தை அவனுக்குச் சுட்டிக் காட்டினாள்.

அப்போது அந்த ஏழை நோயாளி சிறிதுவேளை பிரமிப்புடன் சிந்தித்தான். ஓர்கால் படுக்கையில் புரண்டு திரும்பினான். அச்சிறுமி கொடுத்த பரிமள தைலத்தைக் கண்ணீர் பெருக ஆண்டவரின் திருவடிகள்மேல் ஊற்றினான். பின்னர் சற்றுநேரம் அமைதியாய் இருந்துவிட்டுக் கத்தறீனை நோக்கினான். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

"வெற்றி உனதே; என் செல்லச் சிறுமியே, சுவாமியாரை அழைத்து வா" என்றான். கத்தறீனுக்கு உண்டான களிப்போ கட்டுக்கடங்காததாயிற்று. குதூகலத்துடன் சுவாமியாரிடம் குதித்தோடிச் சென்றாள் அந்தச் சிங்காரச் சிறுமி.

(தொடரும்)

# தொன் சார்த்தோ பாப்பானவர்



பதின்மூன்றும் சிங்கராய பாப்பானவரின் திருமேனி அடக்கத்தின்பின் புதிய திருச்சபைத் தலைவரின் தேர்தலுக்காகக் கருதினால் சார்த்தோ வத்திக்கான் மாளிகையில் கூடவிருந்த கருதினால்மார் திருச்சங்கத்திற்குச் சென்றார். இந்த இரகசிய தேர்தலின் போது தமக்குசசார்பாகக் கருதினால்மார் அளித்த வாக்குகளின் தொகை அதிகரிப்பதைக் கண்ணுற்ற கருதினால் சார்த்தோ தம்மைத் தெரிவு செய்ய வேண்டாமென்று கருதினால்மாரை மன்றாடினார். அவர் தமது மனதை மாற்ற முயற்சி செய்த கருதினால்மாரை நோக்கி: "நாம் இப்படிப்பட்ட பதவிக்கு அருகதை யுள்ளவர் அல்ல; மேலும் செத்தோ, பிழைத்தோ ஊருக்குத் திரும்புவதாக நமது சனத்துக்கு வாக்குக் கொடுத்துவிட்டு வந்தோம்" என்றார்

அதற்குக் கருதினால் ஸரோல்லி மறுமொழியாக: "செத்தோ, பிழைத்தோ என்று நன்றாய்ச் சொன்னீர்; கருதினால்மார் சங்கத்தின் விருப்பத்தையும், தேவசித்தத்தையும் எதிர்த்துப் பாப்பானவர்பதவியை ஏற்காவிடில், யெகோவாவின் கோபத்திற்குப் பயந்தோடிய யோனாஸ் போலாவீர்; உமது அகந் திரும்பும் வழியில் கொடியதோர் ஆபத்து நேரவிட்டுத் தேவன் உம்மைத் தண்டிக்கவுங் கூடும்; இப்படிப்பட்ட ஆபத்துகள் இக்காலத்தில் புகையிரத வீதிகளில் நிகழுவது சகசம்; சீவமோசம் நேரிட்டால் உம்மாலேயே அத்தனை பேரும் இறந்ததாக முடியும்" என்று விடை பகர்ந்தார்.

மனத்துயராற்றாமல் கருதினால் சார்த்தோ இரு கரங்களையுங் குவித்து: "அப்படிச் சொல்லாதேயும்; கெஞ்சிக் கேட்கிறோம்; அப்படிச் சொல்ல வேண்டாம்; இரத்தத்தையும், காயங்களையும் நாம் சகிக்க மாட்டோம் என்று உமக்கு நன்றாய்த் தெரியுமே" என்று கூறினார். அவருடைய முகம் வெளுத்தது. மாற்ற முடியாது, இனி என்ன செய்வதென்ற குறிப்பாய்த் தோள்களைத் தொங்க விட்டார். "தேவசித்தத்தை நாம் ஏற்றுக் கொள்வதே மேல்" என்றார்.

## சரியான விடைகள்

பாலர்பக்கத்திலே "செம்புபித்தளை பாயாது" "அம்மான் புண்பட்ட மாடுது" என்று வெளிவந்த மாறுபட்டுநிற்கும் இருசொற்றொடர்களையும் "செத்த பாம்பு பிளையாது" "மான் அம்புபட்டு மாண்டது" எனச் சரிவர இடம்மாற்றி அனுப்பிவர்களின் நாமங்கள்வருமாறு:

எஸ். இ. ஜே. தாசன், யாழ்ப்பாணம்—*இ. பூலோகம், நேரியகுளம்—எல். அதிரியான் குரூஸ், வங்காலை—*பி. ஜமால்தீன், நேரியகுளம்—ஏ. சேவியர் குலாஸ், வங்காலை—பி. மரியநாயகம் குரூஸ், பறப்பாங்கண்டல்—*ஜே. இனேசென்ற் பீரிஸ், யாழ்ப்பாணம்—டபிள்யு. ஆர். அந்தோனி, யாழ்ப்பாணம்—எஸ். வில்லியம்மா, புங்குடுதீவு கிழக்கு—* எம். யேசுதாசன், பண்டத்தெருப்பு—பி. ஐயம்பிள்ளை, புதுக்குடியிருப்பு—றூவலின் சூசைப்பிள்ளை, இளவாலை—ஜே. றூசவின், யாழ்ப்பாணம்—*ஈ. ஜெயராஜ், இளவாலை—ஆர்.எஸ். பி. அல்போன்ஸ் பிள்ளை, சலாபம்—*ஞா. செபஸ்ரியன் பச்சேக், யாழ்ப்பாணம்—*எ. எமறன்சியானுஸ், இளவாலை—எஸ். றூமிஸ் அன்ரன் நவராஜா, சில்லாலை—பிறின்சிலி அந்தோனிப்பிள்ளை, முகத்துவாரம், கொழும்பு, 15—ஏ. மங்களம் குரூஸ், வங்காலை—என். மரியநாயகம், ஊர்காவற்றுறை—த. கிறிஸ்தோ, புங்குடுதீவு கிழக்கு—எ. சவிரியம்மா பெரோ, பள்ளிமுனை—என். சுவாம்பிள்ளை, மாரீசன்கூடல்—எ. மேரிமாகிறேற், பண்டத்தெருப்பு—*ஜோகானஸ்பீரிஸ், சிலாபம்—எஸ். பத்திநாதன், மாதகல்—*மக்சிமஸ் சேர்ச்சில் பெர்னண்டோ, நீர்கொழும்பு—ஜே. பிளசம், வல்வெட்டித்துறை—*கே. அன்ரனிஸ் குரூஸ், மன்னார்—ஏ. றூக், யாழ்ப்பாணம்—ஏ. சொபாயா, புங்குடுதீவு—ரி. இமல்டா, குருணகல்—கொ. இமமானுவேல், மன்னார்—எஸ். அன்னம்மா, வங்காலை—*ஹில்டா தவேயிரா, கொழும்பு—*ச. சேவியர் பொன்ராஜா, பிடாரிகுளம்—பி. ஜெனேசியஸ், சாவகச்சேரி—*எஸ். ஸ்ரனிஸ்லாஸ், அம்பிட்டிய, கண்டி—பி. பிலிப்பு பொன்னுக்கோன், மன்னார்—எம். மரியான், தன்னுமுனை—ஜெயசீலன் யோசெவ், தெகிவலை—*எம். கொன்சி, டங்கொட்டுவா—*வி. அன்னம்மா, டங்கொட்டுவா—*லூட்ஸ் ஹெற்வீச், டங்கொட்டுவா—மேரி திரேஸ், சில்லாலை—*பி. ஸ்ரீபன் வெண்டக்கோன், செம்பியன்பற்று—எஸ். அந்தோனிக்கம் குரூஸ், பேசாலை—அந்தோனியா சூசைப்பிள்ளை, இளவாலை—எஸ். எம். றிச்சேட், ஊர்காவற்றுறை—எஸ். அல்பிறெட், சில்லாலை, பண்டத்தெருப்பு—எ. திருச்செல்வம், இளவாலை—*எஸ். ஜெயரத்தினம், பத்தாவத்தை—*எம். மங்களநாயகம், புங்குடுதீவு—*எஸ். யெம்மா யஸ்மினு, சில்லாலை—* அ. அருட்பிரகாசம், பாண்டியன்தாழ்வு.

(* இவ்வடையாளம் இடப்பட்டவர்கள் ஒருசொற்றொடருக்கு மாத்திரமே விடைகொடுத்திருந்தார்கள்.)

(தொடரும்)

## கணிதப்பகுதி

1. நீ ஒருதானத்தை ரூபாவாக நினை. அதைப்போல இன்னொருபங்கு கடன் வாங்கு. நான் 20 ரூபா தருகிறேன். எல்லாவற்றையும் கூட்டு. அதிற்பாதியைக் கடவுளுக்குக்கொடு. நீவாங்கின கடனையும் கொடுத்துவிடு. மீதியாய் இருப்பது எவ்வளவு?

2. ஒருகுளத்தில் சில தாமரைப் புஷ்பங்கள் இருந்தன. அங்கு சில கிளிகள் பறந்துசென்றன. குளத்திலிருந்த தாமரைப் புஷ்பங்களின்மேல் ஒவ்வொருகிளியாக உட்கார்ந்தன. அப்பொழுது ஒருகிளிக்கு இடமில்லாமற்போனது. மறுபடி பூவுக்கு இரண்டுகிளியாக உட்கார்ந்தன. இப்பொழுது ஒருபூ மீதியாகி விட்டது. குளத்தில் இருந்த பூக்கள்எத்தனை? வந்தகிளிகள் எத்தனை?

3. ஒருமனிதனுக்கு ஒரு எலுமிச்சம்பழம் தேவை. தோட்டத்திற்குப் போனான். மூன்றுகாவற்காரர் அங்கு நின்றனர். முதற்காவற்காரன் அவனிடம்வந்து: "நீ கொண்டுவரும் பழங்களில் பாதியும், அத்துடன் எனக்கு ஒருபழம் அதிகமாகவும் கொடுக்க வேண்டும்" என்றான். அடுத்தஇரண்டு காவற்காரரும் முதற்காவற்காரன் சொன்னபடியே சொன்னார்கள். அவன் எத்தனை பழங்கள் பறித்துக் கொண்டு வந்தால் கடைசியில் அவனுக்கு ஒருபழம் கிடைக்கும்?

4. ஒரு தோட்டக்காரன் ஒருகூலியாளைப் பிடித்துத் தனது தோட்டத்திலுள்ள தேங்காய்களைப் பறிக்கக் கூட்டிக் கொண்டு போனான். கூலியாள் பறித்த தேங்காய்களை மூன்றுபங்காகப் பகிர்ந்து. தனக்கு ஒருபங்கும், தோட்டக்காரனுக்கு இரண்டுபங்குமாகக் கொடுத்தான். தோட்டக்காரன் தேங்காய்களைக் கொண்டுபோகையில் ஒருதேங்காய் விழுந்தது. அதைக் கூலியாள் எடுத்தான். இரண்டுபேரும் வீடுசென்று பார்த்தபோது இரண்டு பேரின் பங்கும் சரிசமமாக இருந்தது. கூலியாள் தோட்டத்தில்பறித்த தேங்காய்கள் எத்தனை?

5. ஒருவன் ஒருமணித்தியாலத்தில் 4 மைல்தூரம் நடப்பான். பத்துப் பேர் ஒருமணித்தியாலத்தில் எவ்வளவு தூரம நடப்பார்கள்?

இந்த ஐந்துகணக்குகளையும் சரிவரச் செய்து அண்ணாவுக்கு விடைஅனுப்புங்கள் பார்க்கலாம்.

சு. அலெக்சாண்டர்
சாதனபாடசாலை, கொழும்புத்துறை

## பொழுது போக்கு



சிஸ்றர்மொனிக்கா மோட்சத்தின் சந்தோஷங்களையும், அதன் அதிசயங்களையும்பற்றித் தனதுவகுப்புப் பிள்ளைகளுக்கு விளக்கிக்காட்டினா.

அவ்விதம் நெடுநேரம்விளக்கியபின் "உங்களில் ஆர்ஆர் மோட்சத்துக்குப் போக ஆசிக்கிறீர்கள்; கையை உயர்த்துங்கள் பார்ப்போம்" என்றா. ஒரு பிள்ளைதவிர மற்றவர்கள் எல்லாரும் தங்கள்கைகளை உயர்த்தினார்கள்.

அப்போது சிஸ்றர் கையை உயர்த்தாத அந்தப்பிள்ளையை நோக்கி: "மோட்சத்துக்குப்போக உனக்கு ஆசை இல்லையா? என்றுகேட்டா.

அதற்கு அந்தப்பிள்ளை மறுமொழியாக: "மோட்சத்துக்குப்போக எனக்கும் ஆசைதான்; ஆனால், பாடசாலை முடிந்ததும் நேரே வீட்டுக்குவரவேண்டும் என்று அம்மா எனக்குச் சொல்லியிருக்கிறா சிஸ்றர்.

* * *

(அன்று சோவியற் ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குப்பேர்ளினைச் சேர்ந்த நாய்ஒன்று மேற்கு பேர்ளினைத் தரிசித்த உபகதைஒன்று சொல்லப்படுகிறது.)

அதைக்கண்டதே மேற்குப்பேர்ளினிலுள்ள நாய்கள் அதனை நோக்கி: அப்பா! சோவியற் பேர்ளின் பகுதியிலே நாய்களின் நிலைமை எப்படி இருக்கிறது? என்று கேட்டனவாம்.

அதற்கு அந்தநாய் வீம்பாகப்பேசத் தொடங்கி: அங்கே நாய்களுக்கென்ன குறை? ருஷியர்கள் காங்கையான இல்லங்கள் கொடுத்திருக்கிறார்கள். மூன்றுநேரமும் தாராளமாகச் சாப்பாடு போடுகிறார்கள் என்றதாம்.

அப்போ கிழக்கு பேர்ளினிலே எல்லாம் நன்றாய்இருந்தால் நீ எல்லையைத் தாண்டி ஏன் இங்கேவந்தாய்? என்று மேற்கு பேர்ளின் நாய்கள் கேட்க,

அது, நான் சும்மா ஓர்கால் குரைத்துவிட்டுப் போகத்தான் என்று அந்தநாய் விடையிறுத்ததாம்.

● வின்சேந்தியசபைக் குருமாரிலே கடைசியாகச் சீனாவில் எஞ்சியிருந்தவண. ஷெர்மன் சுவாமியாரும் அங்கிருந்து நாடுகடத்தப்பட்டு ஹொங் கோங்கைச் சேர்ந்திருக்கிறார். இவர் ரியென்ற்சின் நகரில் மூன்றுவருட காலம் சிறைவாசஞ் செய்துவந்தார். ஓர் காலத்திலே சீனாவில் வின்சேந்திய சபை மிஷனரிமாராய் 150 பேர் தொண்டாற்றி வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத வினாவிடை

— VIII —

## ஆவியானவர் எங்களை அர்ச்சிப்பவர்

### 6. மிதம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**131.** கற்பும் அதற்குக்குறைவினாலோ மிச்சத்தினாலோ விரோதமான பாவங்களும் ஆனவையென்ன?

சமுசார வாழ்வுக்குரியவைகளை விவாகத்துக்குள் பிரமாணத்தின்படி மட்டுப்படுத்துவதும், விவாகத்துக்கு வெளியில் முற்றாய் அகற்றுவதுமே கற்பாம். சமுசார வாழ்வுக்குரியவைகளை விவாகப்பிரமாணத்துக்குமாறாகப் பின்பற்றுகிற மோகமே கற்புக்குறைவினால் விரோதமான பாவமாம். சமுசாரவாழ்வுக்குரியவைகளை கடமையாயிருக்கும் பொழுது பின்பற்றாமல்விடுகிற சமுசார மறுப்பே கற்புக்கு மிச்சத்தினால் விரோதமான பாவமாம்.

"கற்புடைய சந்ததி எவ்வளவோ அழகாயிருக்கின்றது."
— ஞா. IV. 1.

**132.** நாணமும் அதற்குக் குறைவினாலோ மிச்சத்தினாலோ விரோதமான பாவங்களும் ஆனவையென்ன?

சமுசாரவாழ்வுக்கு உதவுகின்ற மானத்தின் முறைகளை அநுசரிப்பதே நாணமாம். மானத்தின் முறைகளை அநுசரிக்காமல்விடப்பண்ணுகிற நாணமின்மையே நாணத்துக்குக் குறைவினால் விரோதமானபாவமாம். உடுப்புகளில் மிதமிஞ்சின கவனம்எடுக்கிற வேடிக்கையும், போலி நாணமுமே நாணத்துக்கு மிச்சத்தினால் விரோதமான பாவங்களாம்.

"உங்கள் அடக்கவொடுக்கம் எல்லாமனிதருக்கும் தெரிந்திருப்பதாக" —பிலி. IV. 5.

"பெண்பிள்ளைகள் நாணமுடையவர்களாய் இருக்கவேண்டியது" — 1 தி. III. 11.

**133.** நாவடக்கமும் அதற்குக் குறைவினாலோ மிச்சத்தினாலோ விரோதமான பாவங்களும் ஆனவை என்ன?

சமூக வாழ்வுக்கு உதவுகின்ற சம்பாஷணைகளைப் பொதுநன்மைக்காக மட்டுப்படுத்துவதே நாவடக்கமாம். பிரயோசனமில்லாமல் அல்லது தீங்கு விளைவிக்கத்தக்கவிதமாய்சம்பாஷிக்கப்பண்ணுகிற அலப்புத்தனமே நாவடக்கத்திற்குக் குறைவினால் விரோதமான பாவமாம். சம்பாஷிக்கக் கடமையான பொழுதும் மவுனமாயிருக்கப் பண்ணுகிற அமசடக்கமே நாவடக்கத்திற்கு மிச்சத்தினால் விரோதமான பாவமாம்.

"யாதாமொருவன் வார்த்தையில் தவறாதிருந்தால், அவன் சாங்கோபாங்கி" — இயா. III. 2.

"அதிகபேச்சில் பாவமிராமல் போகாது" —பழ. X. 19.

"மனிதர் பேசியிருக்கும் ஒவ்வொரு வீண்வார்த்தைக்கும் தீர்வைநாளில் கணக்குக் கொடுக்கவேண்டும்" —மத். XII. 36.

**134.** பிறர்சிநேகமும் அதற்குக் குறைவினாலோ மிச்சத்தினாலோ விரோதமான பாவங்களும் ஆனவை என்ன?

சமூகவாழ்வின் ஆறுதலைப் பாப்புவதற்காக நாம் நம்மைச்சிநேகிப்பதுபோல, மற்றவர்களைச் சருவேசுரனுக்காகச் சிநேகிப்பதே பிறர்சிநேகமாம். பிறரை வெறுத்து அவர்களுக்குத் தின்மை விரும்புகிற பகையும், அவர்களுடைய நன்மையில் விருப்பயீனப்படுகிற காய்மகாரமுமே பிறர்சிநேகத்திற்குக் குறைவினால்விரோதமான பாவங்களாம். பிறருக்காகச் சுயஆத்தும இரட்சணியத்தைத்தானும் மோசப்படுத்துகிற கடுஞ்சிநேகமே பிறர்சிநேகத்திற்கு மிச்சத்தினால் விரோதமான பாவமாம்.

"சருவேசுரனைச் சிநேகிக்கிறேன் என்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்" — 1, அரு. IV. 20.

**135.** பிறர்சிநேகத்திற்கும் சிநேகிதத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன?

சுயஆறுதலைக் கருதிக்கொண்டு பிறரைச்சிநேகிப்பது சிநேகிதம். ஆனால், சுயஆறுதலைக் கவனிக்காமல், பகையாளிகளைத்தானும் சருவேசுரனுக்காகச் சிநேகிப்பது உண்மையான பிறர்சிநேகம்.

"உங்கள் சத்துராதிகளைச் சிநேகியுங்கள்" — மத். V. 44.

"உங்களை நேசிக்கிறவர்களையே நீங்கள் நேசித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களை நேசிக்கிறவர்களை நேசிக்கிறார்களே" — லூக். VI. 32.

**136.** நாம் ஆரை முதல்சிநேகிக்க வேண்டும்?

நமக்கு மிகவும் கிட்டினவர்களை, உதாரணமாகப் புருஷனை அல்லது மனைவியை, பெற்றோரை அல்லது பிள்ளையை, இனத்தவரை அல்லது அயலாரை, சிநேகிதரை அல்லது உபகாரியையே முதல் சிநேகிக்கவேண்டும். கிறீஸ்தவர்கள் ஒருவர்ஒருவரை விசேஷவிதமாய் நேசிக்கும்படி யேசுநாதர் கற்பித்திருக்கிறார்.

"நீங்கள் ஒருவரைஒருவர் சிநேகிப்பதினாலே நீங்கள் என்சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" —அரு. XIII. 35.

"நான் உங்களைச் சிநேகித்ததுபோல, நீங்களும் ஒருவர் ஒருவரைச் சிநேகியுங்கள். ஒருவன் தன்சிநேகிதர்களுக்காகத் தன்பிராணனைக் கொடுக்கிறதைவிட அதிகமான சிநேகம் எவனிடத்திலும் இல்லை" —அரு. XV. 12—13.

**137.** மிதப் புண்ணியத்துக்கு இசைவான அறிவுவரம் ஆவது என்ன?

மிதத்தின் பிரமாணத்தின்படி, உலக நன்மைகளினதும் இன்பங்களினதும் வெறுமையை ஆழமாய் உணர்ந்து, அவைகளை ஈடேற்றத்திற்கு உதவுகிற அளவுக்குமாத்திரம் பாவிக்கத்தக்கதாக ஆவியானவருடைய ஏவுதல்களை ஏற்றுக்கொள்ளப்பண்ணும் நமதுஉணருகிற மனசின்பக்குவமே அறிவுவரமாம்.

**138.** மிதப் புண்ணியத்துக்கு இசைவான அடக்கஒடுக்க, இச்சை அடக்க, நிறை கற்புக்கனிகள் ஆனவை என்ன?

ஆவியானர் நம்மால் மிதக்கிரியைகள் சிலவற்றை உத்தமமாய்ச் செய்து முடிப்பதினால், நமக்கு வருவிக்கும் இன்பமுள்ள பாக்கியங்களே அடக்கஒடுக்க, இச்சைஅடக்க, நிறைகற்புக் கனிகளாம்.


விற்பனைக்கு!

## கணிதங்கள்

**எண் கணிதம்**

| | ரூ. | சத. |
|---|---|---|
| ஆறும் வகுப்பு ... | 2 | 00 |
| ஏழாம் வகுப்பு ... | 2 | 25 |
| **வீச கணிதம்** | | |
| முதலாம் பாகம் ... | 2 | 00 |
| இரண்டாம் பாகம் ... | 2 | 00 |
| **கேத்திர கணிதம்** | | |
| முதலாம் பாகம் ... | 2 | 00 |
| இரண்டாம் பாகம் ... | 3 | 00 |

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## நாடு சங்கதிகள்

● அமெரிக்க ஐக்கியதேச அணுச்சக்திஆராய்ச்சித் தலைவரான டக்றர் தோமஸ் ஈ. பிறுட்லிஅவர்களின் பதினொருபிள்ளைகளில் ஒருவரான வண. டி. பிறுட்லி முறேஅவர்கள் சமீபத்திலே மேரிலாந்திலுள்ள வூட்ஸ்ரொக் குருமடத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். இவரது சகோதரரான யோசெவ் ஓர் யேசுசபைக் குருத்துவமாணவராவர்.

● புதுவை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த கோலம்பாக்கம்எனும் கிராமத்திலே அர்ச். பத்தாம்பத்திநாதர்போால் புதிய சிற்றாலயம்ஒன்று புதுவைத் துணைமேற்றிராணியாரான மகாவந். ஆர். அம்புறோஸ் ஆண்டவரால் இம்மாதம் 3-ந்திகதியன்று ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. புதியஅர்ச்சியசிஷ்டரின் மூன்று அடிஉயரமான சுரூபம்ஒன்றும் அவ்வேளை ஆசீர்வதித்துப் பீடத்திற்குமேலாக ஸ்தாபிக்கப்படலாயிற்று.

● இவ்வருடத்திலே அமெரிக்கர் பிரத்தியேகபாடசாலைகள் கட்டுவதில் 17 கோடியே 73லட்சம்டலரும், புதிய கோவில்கள் கட்டியெழுப்புவதில் 17 கோடியே 50லட்சம்டலரும் செலவிடவிருப்பதாக அமெரிக்க வர்த்தக—தொழில்பகுதி அறிவிக்கின்றது. இவ்வளவு பெருந்தொகைப்பணம் இதற்குமுன் அங்கு எந்தவருடத்திலும் செலவிடக் குறிக்கப்படவில்லையாம்.

● ஒல்லாந்திலே புரொட்டஸ்தாந்தரையே மிகப்பெரும்பான்மையினராகக்கொண்ட செய்றிக்சிபட்டினத்திலுள்ள கத்தோலிக்க வயோதிகர்சாலையைத் திரும்பக்கட்டுவதற்கும், விசாலமாக்குவதற்குமாகப் பரிசுத்தபாப்பாசர் 17,850 பவுண் அனுப்பிவைத்திருக்கிறார். சமீபத்தில்ஏற்பட்ட வெள்ளப்பிரவாகத்தின்போது இப்பட்டினவாசிகளில் 2,000 பேர் நீரில் மூழ்கி இறந்தார்கள்.

● சீனாவிலே துன்புறுத்தப்படும் திருச்சபைக்காக மன்றாடுவதிலே செபஐக்கியசேனைஒன்று ஈடுபட்டுவருகிறது. இந்தஇயக்கம் ரோமாபுரியிலே சீனமாணவர்ஒருவரால் இற்றைக்குமூன்று வருடங்களின்முன் அடியிடப்பட்டது. பரிசுத்தஸ்தானத்தின் அங்கீகாரத்தைப் பெற்றது. இதிலே 32 நாடுகளைச்சேர்ந்த 4 லட்சம்பேர் அங்கத்தவர்களாய் இருந்துவருகின்றார்கள்.

● பிரான்சும், இத்தாலியும் இவ்வருடம் மார்கழி மாதத்துக்குள் ஐரோப்பியசேனையில் சேராவிடின் மார்கழி 31-ந் திகதிக்குப்பின் இவ்விரு நாடுகளுக்கும் அமெரிக்கவரசு கொடுத்துவந்த உதவியெல்லாம் நிறுத்தப்படுமென்று வெளிநாடுகளுக்குப் பண உதவிசெய்வதை அனுமதிக்கும் அமெரிக்க கம்மிற்றியானது சென்ற 11-ந் திகதியன்று தீர்மானித்திருக்கிறது.

### நன்றியறிந்த தோத்திரம்

நான் இரண்டுமாதங்களுக்குமுன் திடீரென்று வேலையில்நின்று யாதொரு காரணமுமின்றி நிறுத்தப்பட்டேன். எனக்கு வரவேண்டிய ஒருமாதச் சம்பளமும் எனது கூப்பன் புத்தகமும் மறுக்கப்பட்டன. நான் உடனே தொழிலாளிகளைக் கவனிக்கும் காரியாலயத்துக்கு இதைத்தெரிவித்துவிட்டு, தேவதாயாரை அண்டிப்போய்ச் செபமாலைமூலம் அவவை மன்றாடிவந்தேன். அவவின் அருளால் எனக்குச் சேரவேண்டியபணமும், கூப்பன்புத்தகமும் கிடைத்தன. நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

ஜே. ஏ. தோமாஸ்

அகலவத்தை,
மாத்தளை


## Junior School Certificate

**Eng. and Tamil Examinations, November, 1954.**

*(Conducted by the Examination Council of the Northern Province Teachers' Association).*

Closing date for entries of School Candidates :- **25th Sept., 1954.**

Closing date for entries of Private Candidates :- **1st Aug., 1954.**

Late entries will be accepted till **15th Aug., '54** with late fee charges of **Rs. 2/-.**

Apply for entry forms to :—

**T. Seenivasagam,**
*Secretary,*
N. P. T. A. Examination Council,
23, Kannathiddy Road, Jaffna.

## GOVT. TENDERS

MANNAR KACHCHERI

N1794—Tenders for the sale of Foreign Liquor Tavern Rent, Mannar Dist., close at 11 a. m. on 20-8-54. For particulars see Part I—Section II, Govt. Gazette, 16-7-54.

## GOVT. TENDERS

MANNAR KACHCHERI

N1805—Tenders for the sale of Arrack Rent, Mannar Dist., close on 20-8-54 at 11-30 a. m. For particulars see Part I—Section II, Govt. Gazette, 16-7-54.

## புற்று நோய்க்கு ஓர் புதியமருந்து

பலஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து பலன்கண்ட ஒளஷதம் யோகீஸ்வரரசம். புற்றுநோயும், எந்தவிதமான கிரந்தி, புண், பிளவைகளும் இந்த யோகீஸ்வர ரசங்கண்ட மாத்திரத்தில் தீர்ந்துவிடும்.

**போ. செல்லையா வைத்தியர்,**
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## தேவை

நன்மதிப்பும், நம்பிக்கையும் வாய்ந்த இலங்கைச் சுதேசிய இன்சூரன்கம்பனிக்கு வடமாகாணத்திலுள்ள எல்லாத் தபாற்கந்தோர்ப்பகுதிகளிலும் ஏச்சண்டுகளும், இன்ஸ்பெக்டர்களும் தேவை. தகுதியானவர்களுக்குத் தக்கசம்பளமும், கமிசனும், பிரயாணச்செலவும் வழங்கப்படும். பெண்களும், இளைப்பாறிய உத்தியோகஸ்தர்களும் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேர்முகமாகவோ, கடிதமூலமாகவோ 2-8-54 திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும்.

**Branch Manager,**
S. I. Co., Ltd., Top floor,
No. 79, Kasturiar Road, Jaffna,


### வரவுசெலவுத்திட்ட விவாதம்

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் புதிய நிதிவருடத்தில் வரவுசெலவுத்திட்டம் பற்றியவிவாதம் வருகிற 19-ந் திகதி திங்கட்கிழமைமுதல் 21-ந் திகதிவரை நடைபெறவிருக்கிறது. பின்னர்ஆவணி 2-ந் திகதி முதல் 8-ந் திகதிவரையில் சபை கம்மிற்றியாகக்கூடி அதனைப்பரிசோதனை செய்யவிருக்கிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 15-1954

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org